1230

தொகுதி 5.] 1926௵ மே௴ 1௳ [பகுதி 4

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922ஆு பிப்ரவரி மீ 1வ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவழத்தீவு" என்ற நாவல்கள் முடிவுபெற்று "ஞானசேகரம்பாள்" என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான இரண்டு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றி சஞ்சிகைகள் கிடையா. "ஞானசேகரம்பாள்" வேண்டியவர்கள் சந்தாதாரராகச்சேர்ந்து சஞ்சிகைபெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இச்சஞ்சிகை அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்ட நாவல்களடங்கியது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் இதன் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலயம்"

தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

16 JUN 1920

தேவராஜுலு விடுதலை யடைந்ததையும் அவன் தன் சகோதரி யைப்பற்றிக் கூறிய நன்றியான வார்த்தைகளையும் அவளுக் குக் கூறினாள். பிறகு தான் அவர்களிருவரும் கன்னியா மடத்திற்குச் சென்றார்கள்.

சற்றேனும் ஈவிரக்கமின்றித் தேவராஜுலுப் பிரபுவுக்கு மாண தண்டனை விதித்த ஜனரல் இப்போது அவனிடம் அன்போடும் மரியாதையோடும் நடப்பதைப்பற்றிக் கூறு வோம். அந்த ஜெனரல் சமயத்திற்குத் தக்கபடி தன் சுய நலத்தைக் கருதி நடக்கும் இழிகுண முடையவன். நமது தேவராஜுலு செல்வமின்றித் தாழ்ந்த நிலைமையிலிருந்தால் அவனையடியோடழித்து விட அவன் எள்ளளவும் முன்பின் யோசிக்கமாட்டான். தேவராஜோ இப்போது அந்த இராஜ் ஜியத்தில் மிக்கசெல்வம் பொருந்தியவனும், பூஸ்திதியுடைய வனும், பிரபுப்பட்டம் பெற்றவனுமாகிய பெரிய ஸ்ரீமானாக விருக்கிறான். அவன் அரசனைக்கண்டு அரசனுக்கு அவன் மேல் அபிமானம் உண்டாகி விட்டால் தனக்கு அவன் தயவு அதிகமாய் வேண்டியிருக்கும். ஆகையால் இவை யாவும் கருதியே, தேவராஜுலு தன் அந்தஸ்து செல்வம் யாவையும் பெற்று இந்த நாட்டில் இருப்பான் என்று அறிந் ததும் அவனுக்கு மிக்க மரியாதை செய்யவும் அன்புகாட்ட வும் தொடங்கினான். தன் மாளிகையில் இரண்டு மூன்று நாட்கள் தங்கி யிருக்கும்படி வேண்டிக்கொண்டான். அவ னுடைய புத்திரிகளும் அவ்வாறே வேண்டிக்கொண்டார் கள். ஆனால் அவர்கள் மனப்பூர்வமான அன்போடு கூறுகிற வர்கள்.

186504.

தேவராஜுலு, ஜெனரலின் குணத்தை நன்றாயறிந்து கொண்டான். ஆயினும் அவனுடைய புத்திரிகள் தன் தாய் விஷயத்தில் காட்டும் அன்பிற்காக அவர்கள் மனதிற்கு எள்

d-16

186504

ளளவு துயரமும் உண்டாகும்படி நடந்து கொள்ளலாகாது என்பது அவன் கருத்து. அதனால் அவருடைய வேண்டு கோளுக்கிணங்கி இரண்டு நாட்கள் மாளிகையில் தங்கி யிருக்க ஒப்புக்கொண்டான்.

தேவராஜின் மாளிகைக்காரியஸ்தனுகிய பலராமன் என்பவன் தேவராஜு விடுதலை யடைந்ததைப்பற்றி அடங் காமகிழ்ச்சி யடைந்தான். மறுநாள் முற்பகல் மீனுட்சிச் சீமாட்சி மறுபடி தேவராஜிடம்வந்து அவனைக்கண்டு, தான் அவன் கூறிய நன்றியறிதலாகிய மொழிகளைத் தன் சகோ தரியிடம் கூறியதையும் அவள் அதற்காகக் காட்டிய அன் பையும், அவள் கடைசியில் ஒரு கன்னியாமடத்திற்போய்ச் சேர்ந்து கொண்டதையும் கூறினுள்.

தேவராஜு விவரம் கேட்டபோது மீனுட்சி "தயவு செய்து அதைக்கேட்கவேண்டாம். அவள் எந்த மடத்தில் இருக்கிருளென்பது யாருக்கும் தெரியலாகாதென்பது அவ ளுடைய கோரிக்கை. அவள் தன் பெயரையே மாற்றிக் கொண்டாள். இனி உலக விவகாரங்களை யடியோடு மறந்து விட்டுத் தன் பாபங்களுக்காகக் கடவுளைப் பிரார்த்திப்பதி லேயே தன் வாழ் நாட்களைக் கழிப்பதென்று தீர்மானித்து விட்டாள். அவள் அத்தகைய பாபங்களைச் செய்து விடி னும் இப்போது அவற்றிற்காகப் பூரணமான மனஸ்தாபத் தோடு பிராயச்சித்தம் செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டாள்" என்றுள்.

இம்மொழிகளைக் கேட்டதே தேவராஜு முதலில் மிக்க வியப்படைந்தான். சற்றுநேரம் சிந்தித்தபின் "ஆம்; யோசித்துப் பார்த்தால் அது சரியான தென்றே தோன்று கிறது. ஆ! நான் கூறிய வனைத்தும் நீ உன் சகோதரியிடம் கூறினுயல்லவா?" என்றுன்.

மீனுட்சிச் சீமாட்டி "ஆகா; யாவும் கூறினேன். அவள்

தங்கள் விஷயத்தில் தவருக நடந்து கொண்டதற்காகக் கூடியவரையில் ஈடு செய்யப் பூரண விருப்பமுடையவளாய் இருக்கிருள் என்பதன் அத்தாட்சியாக இதோ இக்கடிதம் இருக்கிறது பாரும் என்று மடியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து அவனிட மளித்தாள். அக்கடிதத்தில் தேவராஜ ூ பூரண நிரபராதியென்பதையும், அவன் பலவந்தத்தாலேயே கலகக்காரரோடு சேர்ந்து கொண்டு இலக்கபுரிக்கு வரவேண் டிய தாயிற் றென்பதையும் ருசுபடுத்தப் பூரண மான அத் தாட்சிகள் வரையப்பட்டிருந்தன. அதில் சகோதரிகள் இரு வருடைய கையொப்பங்களுமிருந்தன. மீனுட்சிச் சீமாட்டி அதை யவனிடமளித்து "இக் கடிதத்தால் தாங்கள் துரைத் தனத்தாரிடம் எல்லா மனஸ்தாபங்களையும் சந்தேகங்களை யும் நீக்கிப் பூரணச் சமாதானமடையலாம்." என்ருள்.

தேவராஜ ூ "ஆ! சீமாட்டியே! உன்னுடையசெய்கை கள் அனைத்தும் நீ எவ்வளவு பூரணமான அன்பு என் விஷ யத்தில் வைத்திருக்கிருய் என்பதை நன்கு விளக்குகின் றன. ஆ! என் தாயார் உன்மேல் அளவுகடந்த அன்பு வைத் திருக்கிருர்கள். நீ எங்களோடு கூடவந்து கொஞ்சநாட்களா வது எங்கள் விருந்தாளியா யிருக்கவேண்டு மென்று கோரு கிருர்கள்" என்ருன்.

மீனுட்சி;— என்னை மன்னிக்கவேண்டும், ஏனெனில் நான் உடனே புறப்பட்டுத் திரிபுரம் செல்ல வேண்டும். என் தமக்கை தன் திரண்ட ஆஸ்தி முழுமையும் தான் சேர்ந்திருக்கும் கன்னியா மடத்திற்கும், இதர தரும கைங்கரியங்களுக்கும் வைத்துவிடத் தீர்மானித்து விட்டாள். அவற்றை யெல்லாம் நான் உடனே அவள் இஷ்டப்படி அவற்றிற்குச்சேர்ப்பிக்கத் தக்க ஏற்பாடு களைச் செய்யவேண்டும். எனக்கும் ஒரு காசும் வைக்க வில்லை. நான் அப்படி யெதிர் பார்க்கவுமில்லை, விரும்பவு

மில்லை. எனக்குப் போதுமான சொத்திருக்கிறது. ஆனால் தன் விலையேறப் பெற்ற அழகிய மாளிகையை மட்டும் எனக்கு விட்டு விட்டாள். நான் உடனே அதன் நிலவறைகளாகிய இரகசிய இடங்களை யெல்லாம் அழித்துவிடப் போகிறேன். ஏனெனில் இத்தகைய அபாயங்களும் மர்மங்களு மிருக்கும் விஷயங்களில் பிரவேசிக்க எனக்குப் பிரியமில்லை" என்றாள்.

தேவாராஜு "நானும் என் மாளிகையின் விஷயத்தில் அப்படித்தான் செய்ய விருக்கிறேன். இப்போது நீ என்னை விட்டுப் பிரிந்து போகிறாய். நமக்குள் எப்போதும் மறக்கொணாத நட்பு உண்டாய் விட்டிருக்கிறது. நான் மணம் செய்து கொண்டபின் நீ கொஞ்சகாலமாவது எங்களிடம் வந்திருக்க வேண்டும். ஞானம்பாள் உன்னை மிக்க அன்போடு வரவேற்றுக் கொள்வாள்" என்றான்.

மீனாட்சி:—"ஆகா; தாங்கள், தங்கள் மனைவியோடு அக்கம்பீரமான மாளிகையில் வாழும் போது அவசியம் நான் வருவேன். நீங்கள் சுகமாய் வாழ்வதைப் பார்த்து என்னிலும் மிக்க சந்தோஷ மடையத்தக்கவர்கள் வேறு யாருமிலர்" என்றாள்.

அதன் பிறகு மீனாட்சி, தேவாராஜின் தாயாரும், ஜெனரலின் புத்திரிகளு மிருக்கு மிடத்திற்குச் சென்று அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு ஒருமணி நேரத்திற்குள் அவ்வூரை விட்டுப் புறப்பட்டாள். அதே தினம் பிற்பகல் தேவாராஜு, மீனாட்சிச் சீமாட்டி யளித்த கடிதத்தை ஜெனரலிடம் காட்டினான். அவர் "நான் ஒரு கடிதம் எழுதி இவையிரண்டையும் அரசருக்கு அனுப்புகிறேன்" என்றார். தேவராஜு அப்படியே யொப்புக் கொண்டான்.

இப்போது முன்பு நடந்த சில விவரங்களைக் கூறுகிறோம்: ஞானம்பாளின் தந்தையாகிய மச்சநாதம் பிரபு

தாம் தேவராஜைப்பற்றி அபிப்பிராயப் பட்டது தவறென் றறிந்ததும், நோய் ஞானம்பாளிடமே யாவும் கூறுவ தென்ற தீர்மானத்தோடு புறப்பட்ட தேவராஜுனுக்கு ஒரு கடிதம் எழுதி ஒரு ஆள் வசமனுப்பினர். அந்த ஆள் தேவ ராஜுன் சென்ற இடத்தை விசாரித்துக் கொண்டே திரிபுரம் வரையில் சென்று அதற்குமேல் தகவல் கிடைக்காமல் அவ ரிடம் திரும்பி வந்து விட்டான்.

இதற்கிடையில் பத்து நாட்கள் கழிந்தன. மச்சநாதர் நடந்த சங்கதிகள்யாவும் விவரமாகத் தமதுபுத்திரிக்கு எழுதி அக்கடிதத்தில் தேவராஜுனுக்கும் ஒரு கடிதம் எழுதி அடக் கம் செய்து இரண்டையும் ஞானம்பாளுக்கு இந்திரபுரிக் கனுப்பினர். அக்கடிதங்களில் தாம் முதலில் நீலாட்சியால் ஏமாற்றப்பட்டுத் தேவராஜின்மேல் மிக்கதவறான அபிப்பிரா யங்கொண்டதையும், அதன் பிறகு கிருஷ்ணராஜுனும் அவன் மனைவியும் கூறியவற்றால் உண்மை தெரிந்ததாகவும், தேவரா ஜின் மனதிற்கும் அவன் தாயார் மனதிற்கும் வியாகூலத்தை யுண்டாக்கியதற்காக மிக்க விசனப்படுவதாகவும் அவர்கள் மனம் பூரண சந்தோஷமடையும் வண்ணம் எழுதி யிருந் தார். ஆயினும் தேவராஜுனுக்குக் கடிதம் கொண்டுபோன வன் அவனைக் காணமல் திரும்பி வந்து விட்டதே தாமே துரிதமாய் இந்திரபுரிக்குச் சென்று நேரில் அவர்கள் மனதிற்குச் சந்தோஷத்தை யுண்டாக்க வேண்டுமென்று புறப்பட்டார்.

மச்சநாதம் பிரபு பல்லவபுரியை விட்டுப் புறப்படும் போது தேவராஜின் தாயாரைக்கண்டு, அம்மா து நயனபுரிக்குச் சென்று தேவராஜுன் வேலையில் சீக் கிரம் போய்ச் சேராமல் ஆலசியம் செய்வதைப்பற்றி அவன் மந்திரிக்கு அவன் மேல் தவறான அபிப்பிராயம் உண்டாகாதவாறு செய்யவேண்டும் என்று கூறினர். அவர்

பல்லவபுரியை விட்டுப் புறப்பட்டபின் தேவராஜின் தாயார் நயனபுரிக்குச் செல்ல ஆயத்தப் பட்டுக் கொண்டிருக்கும் போது, தேவராஜுு தன் கமல விலாச மாளிகையினின்றும் அவளுக்குச் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. அதில் தேவ ராஜுு தனக்குக் கமல நாதம் பிரபுவின் பட்டமும் ஜாகீரும் கிடைத்ததைப்பற்றி எழுதியிருந்தான். அதைக் கண்டதே அம்மாதுக்குச் சொல்லொணு வியப்பும் அடங்காச் சந் தோஷமும் உண்டாயின.

அம்மாது உடனே கமலாபுரத்திற்குப் புறப்பட்டு வந்தாள். அந்தோ! அங்கு வந்து நகரத்திற்குள் பிரவேசித்ததும் அவள் சந்தோஷ மனத்து ஒழிந்து பேரிடி விழுந்தவள் போல் ஆவிசோர்ந்தாள். ஏனெனில் அங்கிருந்த ஜனங்கள் கூறிய சங்கதியால் சில நாழிகைகளுக்கு முன்பே அவன் சிறை செய்யப்பட்டுச் சேவூருக்குக் கொண்டு போகப்பட் டான் என்ற துக்க சங்கதியை யறிந்தாள். அதற்குப்பின் நிகழ்ந்த சம்பவங்கள் முன்பே கூறப்பட்டன வாதலின் இனி நாம் கதையைத் தொடர்ந்து செல்வோம்.

தேவராஜுுப் பிரபுவும் அவன் தாயாரும் ஜெனரல் கோரிக்கையின்படி இரண்டு நாட்கள் அவர் வீட்டிலேயே தங்கியிருந்தார்கள். அதன்பின் தேவராஜுு தன் மாளி கைக்குச் செல்லத் தொடங்கினுன். இச் சந்தர்ப்பத்தில் அவன் உடனே ஞானம்பாளைக்காண இந்திரபுரிக்குச் செல் லக் கருதவில்லையா என்று இதை வாசிப்போர் கருதலாகும். அவன் அவ்வாறு உத்தேசிக்காததற்குக் காரணமுண்டு. முத லாவது தன் தாயார் இப்போது நீண்ட பிரயாணம் செய் யத்தக்க நிலைமையிலில்லை. இரண்டாவது, தான், புதிதாய்க் கிடைத்த தன் ஆஸ்திமுதலியவற்றைச் சட்டப்படி சுதந் தரப் படுத்திக்கொள்ளவேண்டும். அது விஷயமாய் எழுத வேண்டிய பத்திரங்களும் நடக்கவேண்டிய சடங்குகளும்

இருக்கின்றன. மச்சநாதம் பிரபுவுக்குத் தன்மேல் ஏற்பட்ட கெட்ட அபிப்பிராயம் தவறென்று அவர் அறிந்துகொண்டு அதற்காக மனஸ்தாபப்பட்டுத் தனக்கும் ஞானம்பாளுக்கும் கடிதங்கள் எழுதியதும், பிறகு தாமே நேராய் இந்திரபுரிக்குச் சென்றிருப்பதும் ஆகிய இவ் விஷயங்களனைத்தும் தன் தாயாரால் கேள்விப்பட்டானாதலால், நடந்த சங்கதிகளனைத்தையும் கவனிக்கும்போது, அவர் தன் புத்திரியையழைத்துக்கொண்டு நேராய் உடனே கமலாபுரத்திற்கு வர ஒரு ஆக்ஷேபனையுமிராதென்று எண்ணினான்.

இக் காரணங்களோடு தான் மணம் செய்துகொள்ளப் போகும் மங்கையையும், அவள் தந்தையையும் கம்பீரமான தன் சொந்தமாளிகையில் வரவேற்க வேண்டுமென்ற ஆவல் அவனுக்குண்டாயிற்று. ஆகவே அவன் உடனே ஞானம்பாளுக்கும் அவள் தந்தைக்கும் கடிதங்கள் எழுதிப் பிரத்தியேகமாக ஒரு ஆள்வசம் இந்திரபுரிக்கனுப்பினான். ஏனெனில் தனக்கு இங்கு நேர்ந்த ஆபத்தான சம்பவங்கள் மட்டும் எப்படியாவது முன்னாடி அங்கு சேர்ந்துவிட்டுத் தான் விடுதலை யடைந்தது போய்ச் சேராவிட்டால் ஞானம்பாள் மனதிற்குச் சொல்லொணு வியாகூலம் நேரிடலாகும்.

அந்தக் காரியத்தை முடித்தபின் தேவராஜனும், அவன் தாயாரும், ஜெனாலுக்கும் அவர் புத்திரிகளுக்கும் மிக்க அன்பார்ந்த வார்த்தைகளைக் கூறிவிட்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொள்ளும்போது தேவராஜின் தாயார் அவர்களை நோக்கி, முக்கியமாக அக் கன்னிகைகளை நோக்கி, "சீக்கிரத்தில் என் புத்திரனுக்கு மணம்புரிய ஏற்பாடாயிருக்கும். ஞானம்பாள் எங்களிடம் வந்து சேருவாள். அவளும் அவள் தந்தையும் வந்தவுடனே திருக்கலியாணம் நடைபெறும். உங்களை என் மருமகளுக்கு அறிமுகமாக்கி வைக்க வேண்டுமென்பது எனக்கு மிக்க விருப்பம். ஆகையால்

நான் தெரிவித்ததே நீங்கள் கட்டாயம் வரவேண்டும்" என்றாள். அதன்பின் தேவராஜுப்பிரபு, அவன் தாயார், பலராமன் மூவரும் அங்கிருந்து கமலாபுரத்திற்குப் புறப்பட்டார்கள்.

---

## 189-வது அத்தியாயம்.

தேவராஜுக்குச் சந்தோஷமான வரவேற்பு—தேவராஜு கமலாபுரத்தின் மாளிகை சேர்தல்-அந்த மாளிகையில் மச்சநாதம் பிரபுவும் ஞானம்பாளும்--அரசனுடைய தேறுதலான கடிதம்—கிருஷ்ணராஜு உயிர்த்தெழுந்து மடம் சேர்தலை யறிதல்—செல்வாம்பாளுக்குத் தேவராஜின் கடிதம்—வீண்பிரயத்தினம்.

தேவராஜு, அவன் தாயார், அவனுடைய பிரதான காரியஸ்தனுகிய பலராமம்பிள்ளை மூவரும் வண்டியிலேறிக் கொண்டு சேவூரின் வீதிகளின் வழியாகச் செல்லும்போது திரளான ஜனங்கள் கூட்டமாகக் கூடிக் கொண்டு தேவராஜு விடுதலை யடைந்ததற்காகத் தங்கள் சந்தோஷத்தை வெளியிடுங்குறியாக வாழ்த்துதல் கூறி ஆரவாரம் செய்தார்கள். தன் புத்திரன்மேல் அவ்வளவு ஜனங்களுக்கு அநுதாப மிருப்பதைக் கண்ட தாயின் மனம் சந்தோஷத்தால் பொங்கியது. ஆனால் அவள் சந்தோஷம் அம்மட்டோடில்லை.

இவர்கள் ஏறிவரும் வண்டி கமலாபுரத்தை நெருங்கும் போது பெரிய ஆரவாரமான சத்தத்தைக் கேட்டு சாளரத்தின் வழியாகப் பார்த்தபோது நல்ல அழகான உடைகளையுடுத்திக் கொண்டு சந்தோஷமான முகங்களோடு கூட்டமான ஜனங்கள் நகரத்திற்குள் பிரவேசிக்கும் பெரிய வாயிற்படியின் இருபுறங்களிலும் புடை சூழ்ந்து நிற்பதையும்,

அவ்வாயிற்படி அழகிய வளைவான பந்தலாலும், கொடிகளாலும், புஷ்பங்களாலும் அலங்காரம் செய்யப் பட்டிருப்பதையும் கண்டார்கள்.

தேவராஜு, கமலநாதம் பிரபுவின் பட்டத்திற்கும் ஆஸ்திக்கும் சுதந்தரக்காரனாக வந்ததைக்கண்ட ஜனங்களனைவரும் அவன் மேல் மிக்க அன்பு கொண்டார்கள். அவன் ஆபத்தில் சிக்கிக்கொண்டு சிறையாக்கப் பட்டதை யறிந்ததே அவர்களனைவரும் மிக்க துயர மடைந்தார்கள். ஆதலின் இப்போது அவன் விடுதலை யடைந்து க்ஷேமமாக வருவதைக் கேட்டதே யவர்கள் மிக்க சந்தோஷ மடைந்து அவனுக்கு நல்வரவு கூறச் சகல ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள். நகர வாயிலிலிருந்து அவன் மாளிகைக்குச் செல்லும்வழிகள் முழுமையும் தோரணங்கள், வளைவான அலங்காரம் பொருந்திய பந்தல்கள், கொடிகள், புஷ்பத் தோரணங்கள் முதலியவற்றால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. அவன் நகரத்தில் பிரவேசிக்கும்போது வெடிகள் தீர்க்கப்பட்டன.

ஒரு பெரிய அழகான பந்தல் போடப்பட்டிருந்தது. அங்கு வண்டி நிறுத்தப்பட்டது. அங்குக் குழுமியிருந்த நகர சங்கத்தார் தேவராஜுக்கும் அவன் தாயாருக்கும் பூமாலைகள் சூட்டி வரவேற்புப் பத்திரம் வாசித்தார்கள். தேவராஜு அதற்குத் தக்க பதிலளித்தான். தேவராஜு தன் மாளிகை யருகிற் சென்று இறங்கியபோது மாளிகையும் அலங்கரிக்கப்பட் டிருந்தது. வேலைக்காரர்களனைவரும் வாயிற்படியில் வந்திருந்து தங்கள் எஜமானுக்கும் அவன் தாயாருக்கும் மிக்க சந்தோஷமான நல்வரவு கூறி அவர்களை உள்ளே யழைத்துச் சென்றார்கள்.

இப்போது தேவராஜின் தாயாருக்குண்டான சந்தோஷத்திற்கோர் அளவே யில்லை. தன் புத்திரனுக்கு வைபோகமும், கௌரவமும் உண்டாகி யிருப்பது கனவோ உண்

மையோ என்று பிரமிப்படைந்தாள். அச்சமயம் தன் புத்திரனுக்கு நேர்ந்த பிராணுபத்தும் தான் பட்ட நரக வேதனையும் இப்போது கனவுபோல் தோன்றின. எப்படியாயினும் அச்சங்கதிகளை யிப்போது அடியோடு மறந்து விட வேண்டு மென்றே துணிந்து விட்டாள். அவள் மனம் ஆனந்தத்தில் முழுகி விட்டது.

நான்கைந்து நாட்களுக்குள் அரசனிடமிருந்து வந்த கட்டளைப்படி தேவராஜு சட்ட ஒழுங்குபோல் பட்டம் ஆஸ்தி யாவற்றையும் தன் சுயாதீனப்படுத்திக் கொண்டான். இன்னும் சில நாட்கள் கழிந்தபின் நேராக அரசனுடைய பிரதான மந்திரியிடமிருந்து தேவராஜுப்பிரபுவுக்கு ஒரு கடிதம்தம் வந்தது. அதில் தேவராஜு, ஜெனரல் மூலமாக அனுப்பிய—சுந்தராபாய் இராஜகுமாரியும் மீனுட்சிச்சிமாட்டியும் எழுதியகடிதங்கள்வந்து சேர்ந்ததாகவும், தேவராஜுப்பிரபு இலக்கபுரியைத்தாக்க முயன்ற அக் கலகக்காரர் கூட்டத்தில் சேர்ந்திருந்ததைப்பற்றி அவர் மேல் ஏற்பட்டிருந்த சந்தேகம் அடியோடொழிந்ததாகவும், இப்போது அரசர் தேவராஜுப்பிரபு மிக்க சத்தியமும் பெருந்தன்மையும் இராஜபக்தியும் உடையவரென்று பூரணமாய் நம்புவதாகவும், அதனல் அவர் எச்சமயத்தில் அரசருடைய பேட்டிக்காக வந்தாலும் மிக்க அன்போடு வரவேற்றுக் கொள்ளப்படுவாரென்றும், அரசர் அத்தகைய சுத்த வீரத்தன்மையையும், பெருந்தன்மையையும், நெறிகளையுமுடைய வாலிபப்பிரபுவைக்காண ஆவலுடையவராக விருக்கிறு ரென்றும் வரையப்பட்டிருந்தது. அதில் பிரதம மந்திரி எழுதிய ஒரு கடிதமும் வைக்கப்பட்டிருந்தது. அக் கடிதத்தில் மந்திரி, தேவராஜுப்பிரபு நிரபராதியென்று தன் மனதிற்குப் பூரணமாகப் படுகிறதென்றும், ஆகையால் அவர் விடுதலைபடைந்து தமது பட்டம் பூஸ்திதி முதலிய

வற்றை யடைந்ததற்காகத் தான் மிக்க சந்தோஷமடைவ தாகவும், அப்பிரபுவைக்கண்டு தன்னுடைய சந்தோஷத்தை வெளியிடத் தான் மிக்க ஆவலுடையவனு யிருப்பதாகவும் எழுதி யிருந்தது.

பின்னும் நான்கைந்து நாட்கள் கழிந்தன. அதாவது தேவராஜு தன் மாளிகைக்கு வந்து சேர்ந்து நான் கைந்து வாரங்கள் கழிந்தன. ஒரு நாள் தேவராஜுப் பிரபு தன் பூமிகளைப் போய்ப் பார்வையிட்டுக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருக்கிறன். மாலை ஆறு மணிக்கு மேலாகி விட்டது. அவனுடையபிரதம காரியஸ்தன் கூட இருக்கிறன். அவன் தன் மாளிகையை நெருங்கி வந்தபோது வேலைக்காரரில் முக்கியமானவன் அவனுடைய வருகைக்கு ஆவலோடு காத்திருந்தவன் போல் தோன்றினன்.

தேவராஜு வாயிலருகில் குதிரையினின்றிழிந்ததும் அவ் வேலைக்காரன் அவனருகில் வந்து "பிரபுவே' தாங்கள் வந்ததும் தாயாரவர்கள் முன்னுடித் தாங்கள் அவர்களை வந்து காண வேண்டு மென்று கூறினர்கள்" என்றுன்.

தேவராஜு.—"ஆ! உண்மையாகவா? ஆனல் என் தாயாருக்கு அசௌக்கியம் ஒன்று மில்லையே? அல்லது துயரமான சங்கதி ஒன்று மில்லையே?" என்றுன்.

ஆதிமுதல் தேவராஜு கூடவேயிருக்கும் அந்த அந்தரங்க வேலையாள் புன்னகை யோடு "பிரபுவே! தாங்கள் அத்தகைய கலக்கம் சற்றும் கொள்ளவேண்டாம்; சீமாட்டியவர்கள் பூரண சுகத்தோடும் சந்தோஷத்தோடுமே யிருக்கிறர்கள். இந்திரபுரியிலிருந்து ஏதோ கடிதங்களோ அல்லது...அல்ல கடிதங்கள்தான் வந்திருப்பதாகத் தெரிகிறது" என்றுன்.

இம் மொழிகளைக்கேட்டதே வராஜு "ஆ! இந்திரபுரியிலிருந்தா? கடிதங்களா?" என்று கூறியதும் துரித

மாகத் தன் தாயார் இருக்கும் அறைக்குச் சென்று அம் மாதைக்கண்டு "அம்மா! என்ன விசேஷம்?" என்றான்.

அவன் தாயாரின் முகத்தில் சந்தோஷம் பிரகாசிக் கிறது. அம்மாது, "குழந்தாய்! நான் உனக்குச் சந்தோஷ சமாசாரம் வைத்துக்கொண் டிருக்கிறேன்" என்றாள்.

தேவராஜு மிக்க சந்தோஷத்தோடு தாயாரை யாலிங்கனம் செய்துகொண்டு "அப்படியா? பெரும்பாலும் இந்திரபுரியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது போலும். ஒரு ஆளே நோகக்கொண்டு வந்தானுக்கும்" என்றான்.

அவன்தாயார் "மைந்தனே! கடிதமல்ல. ஆளே. அதா வது மச்சநாதம்பிரபுவே நோய் வந்திருக்கிறார். உன் அறையில் உட்கார்ந்திருக்கிறார். நீயினி ஞானம்பாளை மணம் புரிவதில் ஒரு சந்தேகமுமில்லை" என்றாள்.

தேவராஜு:—"ஆ! இது மிக்க சந்தோஷமான சங்கதியே. அம்மா! ஆயினும் அவர்மட்டும் தனியாய் வந்த தென்ன. தம் புத்திரியைத் தம்கூடவே அழைத்து வாராதகாரணமென்ன? அதில் அவருக்கென்ன ஆக்ஷே பனே?" என்றான்.

அவன்தாயார் பின்னும் புன்னகையோடு "குழந்தாய்! நீ போய் அவரைப்பார். அவர் மற்ற சங்கதியாவும் கூறு வார்" என்றாள்.

தேவராஜு சந்தோஷத்தோடு மச்சநாதம் பிரபுவைக் கண்டு அவர் என் ஞானம்பளை யழைத்து வரவில்லை யென்ற காரணத்தை யவரிடமிருந்தறிய வேண்டுமென்ற பேராவ லோடு அவர் இருக்கும் அறைக்குச்சென்று கதவைத் திறந்து அவர் எங்கு உட்கார்ந்திருக்கிறார் என்று நோக்கி னன். ஆ! அப்போது அவனுக்குண்டாகிய ஆனந்தத் திற்கு அளவேயில்லை. ஏனெனில் ஞானம்பாளே ஆவ லோடு பாய்ந்து அவன் எதிரில் ஓடிவருவதைக் கண்டான்.

மறுவிநாடி காதலர் இருவரும் ஒருவரை யொருவர் தம்மை மறந்து தழுவிக் கொண்டார்கள்.

அச்சமயம் காதலர் இருவரும் அடைந்த சந்தோஷம் இவ்வுலகத்தில் அவர்கள் அடையக்கூடிய சந்தோஷங்களனைத்திலும் மேலான தெனக்கூறலாம். அவர்கள் இந்திரபுரியில் ஒருவரைவிட்டொருவர் பிரிந்து ஒரு வருடத்திற்கு மேலாகிறது. தேவராஜு அப்போது ஏழையாகிய ஒரு அற்ப உத்தியோகஸ்தனாக அமர்ந்து தன் தாய் நாட்டை விட்டுப் புறப்பட்டான். நயனபுரியில் வந்து சேர்ந்ததுமுதல் இச் சொற்பகாலத்திற்குள் அவன் எத்தனையோ ஆபத்துகளில்சிக்கினான். அவன்கண்ட அற்புதசம்பவங்கள் எத்தனை? அனுபவித்த துன்பங்களும் பட்ட கஷ்டங்களும் எத்தனை? எத்தனை விதமான மனிதர்களைக் கண்டான். உலகில் ஜன சமூகத்தில் நடக்கும் மர்மங்கள், சூதுகள், மோசங்கள், துரோகங்கள் எத்தனை நேராய்க்கண்டான்? இவற்றால் முதிர்ந்த ஒருவன் அடையத்தக்க உலக அனுபவத்தைப் பெற்றான். இதற்கிடையில் எத்தனை சந்தர்ப்பங்களில் தான் இனித் தன் தாயாரையும் காதலியையும் காணப்போகிறதில்லை யென்றும் தன் ஆயுள் முடிந்துவிட்டதென்றும் கருதினான்? இவையாவும் அனுபவித்தும் சத்தியத்தையும் நீதியையும் நேர்மையான ஒழுக்கத்தையும் கைவிடாதிருந்ததால் கடவுள் இவற்றின் முடிவில் உயர்ந்த அந்தஸ்தையும் திரண்ட செல்வத்தையும் அளித்தார். அவன் ஏழை யென்றுணர்ந்தும் அவனுடைய நற்குணங்களுக்காகவும், நல்லொழுக்கங்களுக்காகவும், அவனை மணம்புரியச் சம்மதித்த நமது ஞானம்பாள் தன் காதலன் இவ்வளவு சொல்பகாலத்தில் சிறந்த அந்தஸ்தையும் திரண்டசெல்வத்தையும் அடைந்தான் என்பதையும் சீக்கிரத்தில் அவை நமக்கும் சொந்தமாகப்போகிற தென்பதையும் அறிந்தபோது எவ்

வளவு சந்தோஷமடைந்தான் என்பதை நான் கூறவேண்டுவதில்லை.

தேவராஜு அப்போதுதான், தனக்கு நேர்ந்த சம்பவங்களனைத்தும் தன் காதலிக்குக் கூறினான். ஆனால் செல்வாம்பாள் விஷயங்களைப் பற்றிமட்டும் பூரணமாகக் கூறவில்லை. அவள் தந்தையிடம் மட்டும் யாவும் கூறினான். இருவரும் யோசித்தே இப்போது ஞானம்பாளடையும் சந்தோஷத்தில் கொஞ்சமேனும் குறையலாகாதென்று, அவளுக்குக் கூறாமல் மறைக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஆயினும் பின்னால் எந்த வழியாலாவது அவளைப் பற்றிய சங்கதிகள் ஞானம்பாளுக் கெட்டுமென்று அவர்கள் அறிவார்கள்.

மச்சநாதர் பல்லவபுரியிலிருந்து தன் புத்திரியையும் தேவராஜையும் காணவேண்டுமென்று சென்றபோது, இந்திரபுரி இராஜாங்கத்தார் ஆத்தூர் ஜமீனையும் அதைச்சேர்ந்த ரொக்கஸ்திதியையும் அவருக்களிக்கத் தீர்மானித்து விட்டதாகத் தெரியவந்தது. அவர் நேராய் மந்திரியைச் சந்தித்தபோது மந்திரி அதற்கு வேண்டிய பத்திரங்களையும் பிரபுப் பட்டத்தையும் முறைப்படி யவரிடம் அளித்தார். ரொக்கப்பணத்தை வைத்திருந்த வர்த்தகசங்கத்தார் உடனே அதை யளித்துவிட்டார்கள். அத்தொகை இரண்டு லட்சம் பவுன்களுக்கு அதிகமாயிருந்தது. இப்போது மச்சநாதர் பகிரங்கமாகவே பிரபுப்பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.

மச்சநாதர் தேவராஜைச் சந்தித்த பின்புதான் நீலாட்சி அவன்மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ளும் எண்ணத்தோடு தன்னிடம் கூறிய சங்கதிகளை யெல்லாம் கூறினார். அதன் மேல் தேவராஜு அவள் தன்மேல் காதல் கொண்டதாய்க் கூறியதையும் தான் அதை வெறுப்போடு மறுத்துவிட்டதையும் செல்வாம்பாள் அச்சுதன் மூலமாய் அறிந்து தன்

னிடம் கூறிய சங்கதிகளையும் யாவும் கூறினுன். அந்தத் துஷ்ட ஸ்திரீ தன்னை யடியோடு ஏமாற்றி விட்டாள் என்று கூறி அப்பிரபு மனவருத்தப்பட்டார். ஆயினும் இருவர் மனதிலிருந்தவைகளும் இப்போது வெளிப்பட்டுக் கொஞ்ச நஞ்சமிருந்த கலகமும் ஒழிந்தது.

நண்பர்களே! இராஜசுந்தரி யிறங்கியிருந்த ஹோட்டலில் அவளும் கிருஷ்ணராஜனும் விழுந்து கிடந்தபோது கிருஷ்ணராஜின் வேலைக்காரன் அங்கு வந்தான் என்று கூறியிருப்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இப்போது மச்சநாதம்பிரபு கூறியதால் தேவராஜனுக்குப் பின்கண்ட விஷயங்கள் தெரியவந்தன.

தன் எஜமானும் எஜமாட்டியும் சவம்போலிருப்பதைக் கண்ட வேலைக்காரன் உடனே ஒரு வைத்தியரை யழைத்து வந்தான். அவர் வந்து பார்த்தபோது முதலில் இருவரும் மரித்துவிட்டார்கள் என்றே எண்ணினுர். இராஜசுந்தரி யருகில் விழுந்திருந்த புட்டியால் அவர்கள் எத்தகைய விஷத்தை யருந்தினுர்களென்று தெரிந்தது. அவர் உடனே இருவரையும் நன்ருகச் சோதித்தபோது இராஜசுந்தரி இறந்து போனுளென்று நிச்சயமாய்த் தெரிந்தது. ஆனல் கிருஷ்ணராஜன் விஷயம் கொஞ்சம் சந்தேகமாகவிருந்தபடியால் உடனே முறிப்புமருந்தைக் கொண்டு தம்மால் கூடியவரையில் சிகிச்சை செய்தார். சுமார் அரைமணி நேரம்கழித்து உயிர் இருக்கும் குறிகள் கொஞ்சங் கொஞ்சமாகப் புலப்படத் தொடங்கிக் கடையிசில் தாராளமாகச் சுவாசம்விடத் தொடங்கினுன்.

உண்ணுமுலையும் சிங்காரம் பிரபுவும் நடந்த சங்கதியைக் கேட்டு மிக்க துயரத்தோடு அங்குவந்து சவத்தையும் கிருஷ்ணராஜையும் தங்கள் வாசஸ்தலத்திற்குக் கொண்டு போனுர்கள். சவம் அடக்கம் செய்யப் பட்டது.

கிருஷ்ணராஜு படுக்கையை விட்டுவெளியேற ஒருமாதம் பிடித்தது. இராஜசுந்தரியின் தந்தை, தன் திரண்ட செல்வத்தைத் தன் புத்திரிக்கே வைத்துவிட்டிறந்த படியால் இப்போது சட்டப்படி அந்த ஆஸ்தி முழுமையும் அவள் கணவனாகிய கிருஷ்ணராஜுக்கே சேர்ந்தது. அவன் பாட்டனார் ஆஸ்தியும் அவனுடையதே. ஆனால் கிருஷ்ணராஜு தான் மணம் புரிந்து இல்லறத்தில் அனுபவித்த கஷ்டத்தால் உலக சுகம் தனக்கு வெறுப்பாகி விட்டதென்றும் இனி யொரு போதும் மணம் புரிவதில்லை யென்றும்கூறி, தன் ஆஸ்தியில் ஆயிரம் பவுன் ஒருமடத்திற் களித்துவிட்டுத் தானும் அம்மடத்திலுள்ள சந்நியாசிகளில் ஒருவனாய்விட்டான். மற்ற திரண்ட ஆஸ்தி முழுமையும் உண்ணாமுலைக் களித்து விட்டான். இதனால் சிங்காரம் பிரபுவும் உண்ணாமுலையும் தங்கள் அந்தஸ்திற்குத் தக்கபடி வாழவும் தங்கள் குழந்தையை அந்தஸ்தின்படி சீராட்டி வளர்க்கவும் சக்தியுடையவர்களானார்கள்.

இச்சங்கதி யனைத்தும் கேட்ட தேவராஜு உண்ணாமுலைக்கு ஆஸ்தி கிடைத்ததைப்பற்றி மிக்க சந்தோஷமடைந்தா னெனினும் கிருஷ்ணராஜு உலக போகங்களைக் கொஞ்சகால மாவது சந்தோஷமாக அனுபவிப்பதற்கில்லாது போனதைப்பற்றி வியாகூலப் பட்டான்.

மச்சநாதரும் ஞானம்பாளும் வந்து சேர்ந்த மறுவாரம் தேவராஜு செல்வாம்பாளுக்கு ஒரு கடிதம் எழுதினான். அக்கடிதத்தில் ஞானம்பாளும் அவள் தந்தையும் தன்னோடிருப்பதையும், தனக்குப் பட்டமும் செல்வமும் கிடைத்திருப்பதையும் கூறித் தான் அவளுக்குப் பிரத்யேகமாகப் போதுமான ஆஸ்தி வைப்பதாகவும் அதை வைத்துக் கொண்டு அவள் நிம்மதியாக நல்ல வழியில் தன் வாழ் நாட்களைக் கழிப்பது நலம் என்று எழுதி அதை யொரு ஆள்

வசம் திரிபுரத்திற் கனுப்பினன். அந்த ஆள் திரிபுரத்திற்குச் சென்று அவனால் ஆன வரையில் விசாரித்துப்பார்த்தும் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று திரும்பிவந்து தேவராஜிடம் சங்கதியைக் கூறிவிட்டான்.

---

## 190-வது அத்தியாயம்.

உருக்மாங்கதம் பிரபுவின் உதாரகுணம்—
துரைத்தனத்தாரின் மன்னிப்பு—தேவராஜனுக்கும்
ஞானம்பாளுக்கும் திருமணம்-சயன அறையில்
இரகசிய வழியாக ஞானம்பாள் முன் செல்வாம்பாள்
திடீலென்று தோன்றல்—துரைத்தனத்தாரும் தானும்
மாளிகையில் இரகசிய வழியைத் தெரிந்து
கொண்ட விவரம்—செல்வாம்பாளின் பிரிவு—
ஞானம்பாளின் துயரம்.

உருக்மாங்கதப்பிரபுவினிடமிருந்து இப்போது சமாசாரம் வந்தது. அவர் இலக்கபுரியைத்தாக்கிய கலகக் கூட்டத்தின் தலைவரென்பதும், அச்சமயம் அவர் காயமடைந்து படகில் ஏற்றிக்கொண்டு போகப்பட்டார் என்பதும் நேயர்கள் அறிந்த விஷயங்களே. அப்பிரபு இரண்டுமாதங்கள் கழித்தே பூரண சுகமடைந்தார். பலராமன் அவருடைய நண்பனானதால் தேவராஜனுப் பிரபுவின் விவகாரங்களனைத்தும் ஒழுங்கு படுத்தப்பட்டதும் அவன் அங்கிருந்து புறப்பட்டுத் தன் நண்பராகிய உருக்மாங்கதம் பிரபுவைக் காணச் சென்றான்.

உருக்மாங்கதம் பிரபு மிக்க நேர்மையான நடக்கை உடையவர். தேவராஜின் உயிரைக் காப்பாற்ற அவர் எவ்வளவோ பிரயத்தனப் பட்டார் என்பது முன்னமே கூறப்பட்

டிருக்கிறது. தமது மன மொத்த நண்பாராகிய கமலநாதம் பிரபு தமது ஆஸ்தி முழுமையும் குறைந்தது அதன் பெரும் பாகத்தை யேனும் தமக்கே வைத்திருப்பார் என்று அவர் மனப்பூர்வமாக நம்பினர். ஏனெனில் கமலநாதம் பிரபுவுக்கு இவரை விட உண்மையும் விசுவாசமுமுடைய உயிர்த் தோழன் வேறு கிடையாது.

அப்படி யிருந்தும் தேவராஜனுக்கே கமலநாதம் பிரபு தமது பட்டத்தையும் முழு ஆஸ்தியையும் எழுதி வைத்திருக்கிறார் என்பதையறிந்த போது அவர் சற்றேனும் பொருமைப் படவில்லை. அவர் கருதி யிருந்தால் அம் மரணசாசனத்தை மறைத்து விட்டிருக்கலாம், அல்லது எத்தகைய சூதேனும் செய்திருக்கலாம். ஆனல் அவர் அதற்கு மாருகத் தேவராஜன் தமது கட்சியில் உறுதியாகச் சேர்ந்து விட வேண்டு மென்று ஆசைப்பட்டே உடனே அவனுக்கு அச் சங்கதியை யவன் அறிய வொட்டாமல் மறைத்து வைத்தார்.

பின்னுல் நடந்த சம்பவங்களுக்குப்பின் அவர் தாம் நேரில் சென்று, தேவராஜனுக்கு அத்தகைய அதிஷ்டம் கிடைத்ததற்காகத் தமது சந்தோஷத்தை வெளியிட வேண்டு மென்று ஆவல் கொண்டிருந்தார்.

துரைத்தனத்தார் சில இரசிய காரணங்களுக்காக, முக்கியமாகச் சுந்தர சிங்க இராஜனுடைய கடிதங்கள் வெளி வந்து விடின் அதனுல் மிக்க அவமானமும் பொது ஜனங்களுக்கு வெறுப்பும் நேரிடு மென்ற அச்சத்தால் இக்கலகத்திற் சம்பந்தப்பட்ட அனைவரையும் தந்திரமாய் மன்னித்து விட்டார்கள்.

1849ஞு டிசம்பர் மாதம் தேவராஜனுக்கும் ஞானம்பாளுக்கும் கமல விலாசத்தில் திருமணம் நிறைவேறியது. அச் சமயம் உருக்மாங்கதம் பிரபுவைப் பலராமன் தேவராஜன

அப்பிரபுவுக்கனுப்பிய மிக்க அன்பார்ந்த அழைப்புப் பத்திரத்தின்படி அழைத்துவந்தான். அவ்வாறே சேவூரிலிருக்கும் ஜெனாலும், அவர் புத்திரிகளும், தேவராஜனும் அவன் தாயாரும் அனுப்பிய அன்பு நிறைந்த அழைப்புப் பத்திரங்களின்படி அங்கு வந்து சேர்ந்தார்கள்.

1850ஹு ஜனவரி மாதம் முதல் இரண்டு மூன்று வாரங்கள் வரையில் கமல விலாசத்தில் ஆடம்பரமான விருந்துகளும், வேடிக்கைகளும், கேளிக்கைளுமாகவே யிருந்தன. அந்த நாட்டு மந்திரி பிரதானிகள் முதலிய எல்லாப் பிரதம உத்தியோகஸ்தர்களும், உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களும், செல்வவான்களும் அம்மாளிகையில் வந்து நிறைந்திருந்தார்கள். ஏனெனில் அந்த இராஜாங்கத்திலுள்ள ஜமீன்களிலெல்லாம் கமலாபுரமே மிக்க செல்வம் பொருந்தியதும் உயர்ந்தது மானது.

மேற்கண்டவாறு விருந்து நடந்து கொண்டே யிருக்கையில் ஒரு நாள் பெரிய விருந்து நடந்தது. அன்று அந்த நாட்டிலிருந்த பிரதானமான பிரபுக்களெல்லாம் வந்திருந்தார்கள். விருந்து முடிந்ததும் மாளிகையிலுள்ளோர் அவரவர் சயன அறைக்குச் சென்றார்கள். ஞானம்பாளும் தன் அறைக்குச் சென்று தனக்காக அமர்த்தப்பட்ட இரண்டு தோழிகளையும் அனுப்பிவிட்டுத் தான் சயனித்துக் கொண்டாள். அன்று நடந்த களிப்பான விஷயங்களை நினைத்துக் கொண்டே நித்திரை போய் விட்டாள்.

தான் எந்நேரம் நித்திரை செய்து கொண்டிருந்தாளோ அவளுக்குத் தெரியாது. திடீலென்று விழித்துக் கொண்டாள். அப்போதும் அவளுக்குக் கனவிலிருப்பது போலவே யிருந்தது. கனவில் கண்ட உருவங்கள் அனைத்தும் முன்னே தோன்றுவதுபோலவே யிருந்தது. கடைசியில் நன்றாக விழித்துக் கொண்டு தன் பார்வைக்கு எதிரி

லிருக்கும் சுவரை நோக்கினுள். அறையில் ஒரு தீபம் எரிந்து கொண்டே யிருந்தது. அது விசாலமான பெரிய அறை. அதன் சுவர்கள் முழுமையும் சித்திரங்கள் அமைக்கப்பட்ட கடிதம் ஒட்டப்பட்டிருந்தது. ஞானம்பாளுக்கு நேராக எதிரிலிருந்த சுவர் ஓரம் அழகான ஒரு பெரிய அலமாரி யிருந்தது. அது உடைகள் அப்படியப்படியே தொங்கவிடப் படுவதாகையால் மிக்க உயரமாயிருந்தது. ஞானம்பாளுக்கு இன்னும் தூக்கம் பூரணமாகத் தெளியவில்லை. அம்மயக் கத்திலேயே யிருக்கையில் அலமாரியின் பக்கத்தில் சுவரில் ஒரு கதவு திறக்கப்பட்டிருப்பது போல் இருளாகத் தோன் றியது. அங்கு கதவில்லையென்று அவள் அறிவாள். இதைக் கண்டதும் சற்று கலக்கத்தோடு உற்று நோக்கினுள். ஆம் அங்கு ஒரு கதவு இருக்கவேண்டிய உயரத்திற்கு இருளாகத் தெரிந்தது. அதற்குள் நன்றுய் விழித்துக்கொண்டாள். திகிலடைந்து கூச்சலிடக் கருதினுள். ஆயினும் சமாளித் துக்கொண்டு தட்டென்று எழுந்து படுக்கையில் உட்கார்ந்து உற்று நோக்கினுள்.

ஒரு ஸ்திரீயின் உருவம் வாயிற் படியில் வந்து நின் றது. உடை சலசலவென்று சத்தித்ததால் ஸ்திரீயென்று தெரிந்தது. இன்றேல் உடனே சத்தமிட்டு விட்டிருப்பாள். இப்போதும் திகிலோடும் குழப்பத்தோடும் நோக்கினுள். அந்த உருவம் அறைக்குள் வெளிச்சத்தில் வந்தது. ஞானம் பாள் அவள் முகத்தை ஒரு விநாடியுற்றுப் பார்த்தாள். அவள் மனதில் சொல்லொணு வியப்பும் சந்தோஷமும் உண்டாயின. ஏனெனில் அவ்வுருவம் செல்வாம்பாளின் உருவமே.

அவளை யறிந்து கொண்டதும் ஞானம்பாள் சந்தோ ஷத்தால் கூச்சலிட்டாள். "ஆ! என் சகோதரியே! நீதானு! உண்மையாய் நீதானு! கனவோ" என்றுள்.

செல்வாம்பாள் அவளை யாலிங்கனம் செய்துகொண்டு 'நான்றான்' என்று கண்ணீர் விட்டாள். அச்சமயம் இருவர் மனதிலுமுண்டான சந்தோஷம் பிரமை யிவற்றால் அவர்கள் சற்று நேரம் பேசாமலிருந்தார்கள். அவர்கள் பிரிந்து பதினைந்து மாதங்களாயின. இடையில் செல்வாம்பாள் இழிவான நடக்கைகளில் பிரவேசித்தாளென்பது ஞானம்பாளுக்குத் தெரியாது.

ஞானம்பாள்:—ஆம் செல்வாம்பாள் தான். செல்வாம்பா! நீ ஏன் இப்படி இவ்வளவு மர்மமாகவும் இரகசியமாகவும் வரவேண்டும்? இங்கே என் தந்தை—உன் சிறிய தகப்பனார் இருப்பது தெரியாதா? இருவரும் உன்னை யன்போடு ஏற்றுக் கொள்வார்கள்.

செல்வாம்பாள்:—"நான் உன்னைப் பார்க்கவே— உன்னை மட்டும் பார்க்கவே வந்தேன். அதனால்தான் உனக்கு முன்னாடி யறிவிக்காமல் இப்படி இரகசியமாக வரவேண்டியதாயிற்று" என்றாள்.

ஞானம்:—ஓ! அப்படியேன் ?...என்பதற்குள் செல்வாம்பாள் "நான் எப்படி இரகசியமாக வந்தேனோ அப்படியே இரகசியமாய் உடனே போய் விடவேண்டும்" என்றாள்.

அதைக்கேட்ட ஞானம்பாள் "ஓ! அப்படிக் கூறாதே. நீ திரும்பி வந்துவிட்டவரையில் இனி என்னைவிட்டுப் பிரியலாகாது. நீ தனியாய் அதாவது ஏகாந்தத்தில் காலங்கழிப்பதாய் என் கணவர் கூறினார்" என்றாள்.

செல்வாம்:—ஆ! அப்படியா கூறினார். நீ என்னைப்பற்றி வேறு விதமாய் நினைக்கத் தக்க வார்த்தையொன்றும் கூறவில்லையென்று உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா? ஞானம்பாள் மனதில் சற்று பீதியடைந்து "இல்லை

யில்லே. நீ கூறுவதென்ன?" என்று மிக்க மனக்கலக்கத்தோடும் ஆவலோடும் வினவினுள்.

செல்வாம்:—"நான் கூறுவதென்னவெனில் நீ இனி யுன் கணவனேடு இந்த நாட்டிலேயே பெரும்பாலும் வசித்துக்கொண் டிருப்பயாதலின்—ஆ! உன்னில்லைமையில் இத்தகைய சந்தோஷமான மாறுதல் நேர்ந்ததற்கும், உன் கணவனுக்கு நேர்ந்த பல இக்கட்டுகளும் ஒழிந்த பின் கடைசியில் திடீலென்ற உயர்ந்த பதவியும் செல்வமும் கிடைத்ததற்கும் என்னேவிட அதிகமாகச் சந்தோஷ மடைகிறவர்கள் ஒருவருமிரார்கள்..." என்ருள்.

ஞானம்:—நீ என்மேல் எப்போதும் அன்புடையவளே யென்றும், என் கணவர் க்ஷேமத்தைக் கோருகிறவளென்றும் நான் அறிவேன். நீ கூறவந்ததைக் கூறு. நான் இந்த நாட்டிலேயே வசிப்பேன் என்று தெரிவதால்...என்ருயே அப்புறம் என்ன?

செல்வாம்:—"ஆம், நீ இங்கேயே வசித்துக் கொண்டிருப்பாயாதலின் பின்னுலேனும் உனக்கு என்னேப்பற்றிய விஷயங்களே—நான் எம்மாதிரி நடந்து கொண்டிருந்தேன், எத்தகைய குற்றங்களேச் செய்தேன் என்பதை நீ கேள்விப்பட நேரிடும்" என்ருள்.

இம்மொழிகளேக் கேட்டதே ஞானம்பாள் பெருந்திகிலும் துயரமுமடைந்து "இல்லேயில்லே. அப்படிக்கூருதே. நான் என்ன நினேக்கவேண்டுமென்பது உன் கருத்து?" என்ருள்.

செல்வாம்:—நான் உனக்குத் தெரிவிப்பதென்னவெனில், உன் கணவர் மிக்க இரக்கத்தோடும் யோசனேயோடும் உன் மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்கலாகாதென்று எண்ணி, நான் செய்த குற்றங்களுக்காக

மனஸ்தாபப் படுவதாகவும் ஏகாந்தத்தில் வசிப்பதாக வும் உன்னிடம் கூறினார். உண்மையில் நான் அப்படி நடந்து கொள்ளவில்லை. ஆனால் உன் தந்தைக்கு உண் மையாவும் கூறியிருப்பார். அவரும் உன் மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்க லாகாதென்றே உண்மை யைக் கூறாமல் மறைத்துவிட்டார்” என்றாள்.

இவைகளைக்கேட்டதே ஞானம்பாள் கண்ணீர்விட்டாள். ஆயினும் இவள் விஷயத்தில் நாம் கேள்விப்பட்டது உண் மையல்லவென்று மட்டும் அவள் அறிந்து கொண்டாளே யன்றி எவ்வளவு வரையில் தீயநெறிகளில் அவள் அழுந்தி விட்டிருக்கிறாள் என்பது ஞானம்பாளுக்குப் புலப்பட வில்லை. செல்வாம்பாள் கூறத்தொடங்கி, “உனக்கு வியா கூலம் உண்டாகலாகாதென்ற நல்ல எண்ணத்தோடு அவர் கள் மறைத்து வைத்தார்கள். இன்னமும் அப்படி யிருக்க லாகாது. ஒருவிஷயத்தை மறைத்து வைத்துக்கொண்டிருப் பவர்கள் மனத்திற்குக் கஷ்டம் உண்டு. ‘உண்மையை மறைத்தோம்’ என்று அவர்கள் மனச்சாட்சியே யுறுத்துவ தோடு, எந்தச்சமயம் அந்த இரகசியம் வெளியாகி விடுமோ, எந்தச்சமயம் நாம் மறைத்து வைத்தோம் என்று தெரிந்து விடுமோ என்ற திகில் இருந்துகொண்டேயிருக்கும். அந்த உத்தமர்கள் மனதிற்கும் இனிமேலும் வேதனை வைக்கலா காது. அந்தக் காரியத்திற்காகவே நான் இப்போது இங்கு வந்தேன். நான் இந்த இரகசிய வழியை யெப்படித் தெரிந்துகொண்டேன் என்பது உனக்கு மிக்க வியப்பாக விருக்கலாகும். ஆகையால் அதைக் கூறுகிறேன். ஒரு பெயரைக் கூறுகிறேன். அதாவது தஞ்சம்மாள்” என் றாள்.

இதைக்கேட்டதே ஞானம்பாள் மிக்க வியப்படைந்து “ஆ! அந்தப்பாதகமாதா? இரண்டொரு நாட்களுக்கு முன்

பல்லவபுரியில் மரணதண்டனை யனுபவித்தாளே அவளா? என் கணவர் அவளைப்பற்றி என்னிடம் கூறியிருக்கிறார். ஆனால் உனக்கு அவள் எப்படித்தெரியும் ?" என்றாள்.

செல்வாம்:—நான் கூறுவதைக்கேள். அவளுக்கு இந்த அரண்மனையிலுள்ள இரகசிய வழிகளனைத்தும் நன்றாகத்தெரியும்.

ஞானம்:—ஆம். அதை நான் அறிவேன். இங்கிருக்கும் இரகசிய நிலவறைகளிலிருந்துதான் அவள் சிறை செய்யப்பட்டாள்.

செல்வாம்:—அவள் இங்கு சிறை செய்யப்பட்டுப் பல்லவ புரிக்குக் கொண்டுவந்து விசாரிக்கப்பட்டதோடு தன்னைப் பிடித்துக்கொடுத்ததற்காக உன் கணவன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவோ, அல்லது துரைத்தனத்தார் தயவைப் பெறவோ கருதி, இங்குள்ள நிலவறை வழிகளையெல்லாம் பூரணமாகவும் தெளிவாகவும் எழுதிக்கொடுத்து விட்டாள்.

ஞானு:—சரி. இருக்கட்டும். அவள்யாவும் அறிவித்து விட்டாள். உனக்கு எப்படி இச்சங்கதி தெரிந்தது?

செல்வா:—"அதைத்தான் கூறப்போகிறேன். நான் முன்னமே யுன்னிடம் கூறிய காரணங்களால் உன்னைக் கண்டு உன்னிடம் நான் கூறியசங்கதிகளை யறிவிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன். ஒரு விஷயம் - நான் திரிபுரத்தில் மாறுபெயர் வைத்துக் கொண்டு வசித்து வந்தேன். அங்கிருந்து நான் இவ்விடத்திற்குப் புறப்பட்டு வரும்போது வழியில் பல்லவ புரியில் தங்கினேன். அங்குதான் இவள் மாளிகையின் இரகசியங்களைப்பற்றி மரண தண்டனை யடைவதன் முன் வெளியிட்டதாகக் கேள்விப்பட்டேன். அந்த நாட்டுக்கு அரசருடைய காரியதரிசிகளுக்குள் காப்

டென் தனபாலன் என்ற ஒருவரிருக்கிறார். அவர் எனக்கு அறிமுகமாக நேர்ந்திருந்தது. அவர் மூலமாக இந்த மாளிகையிலுள்ள இரகசியமான நிலவறைகளை யெல்லாம் நான் அறிந்து கொண்டேன்” என்று கூறினாள்.

இந்தக்காப்டென் தனபாலன் என்பவனே முன்பு சுந்தராபாய் இராஜகுமாரியின் மாளிகையில் உளவுபார்க்க வந்தவன் என்பதையும், செல்வாம்பாளும் அந்தக் காப்டெனும் அம்மாளிகைக்கு விருந்திற்கு வந்திருந்தபோதுதான் தேவராஜன் அங்கு ஒரு துரைத்தன உளவாளி வந்திருப்பதைச் செல்வாம்பாள் மூலமாக அறிந்துகொண்டான் என்பதையும் நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். செல்வாம்பாள் அவன் பெயரைக்கூறும்போது அவள் முகத்தில் நாணமும் கலவரமும் தோன்றின.

ஞானம்பாள் “ஆயினும் இந்த இரகசியவழி என் கணவருக்குத் தெரியாது என்றே நினைக்கிறேன்” என்றாள்.

செல்வா :—அதென்னமோ அதைப்பற்றி யெனக்குத்தெரியாது. இன்னொரு இரகசிய வழிகூட இருக்கிறது. அது கீழிருந்து மேலுக்கு வரும் இன்னொரு பட்டிக்கட்டுகளின் வழியாக வேறொரு அறைக்குச் செல்கிறது.

ஞான:—அந்த வாயிற்படியிலுள்ள கதவு சுவரில் பதியப்பட்ட ஒரு பெரிய நிலைக்கண்ணாடியாக விருக்கிறது. அதைப்பற்றி என்கணவர் கூறினார். அவ்வழி யவருக்குத் தெரியும்.

செல்வா:—“ஆம் ஆம். அதையும் தஞ்சம்மாள் கூறி யிருக்கிறாள். இந்த வழி உன் கணவருக்குத் தெரியாதிருந்தால் இனிமேலுங்கூட அது இரகசியமாக விருக்கலாகாது. இது உன் கணவருக்கு அறிவிக்கப்படவேண்டும். தஞ்சம்மாள் கூறியதால்தான் நான் இந்த இரகசியவழி

யாகவே உன்னை வந்து காண்பது உசிதமென்று துணிந்தேன்” என்றாள்.

ஞானு:—இப்போது இந்த நிலவறைகளை யெல்லாம் அடைத்து விடவேண்டுமென்பதே என் கணவர் அபிப்பிராயம். அதற்காகக் கொத்தர்களிடம் முன்னமே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆ! நீ இந்த அறைக்குள் வருமுன் இந்த இரகசியவழியிலுள்ள கதவைச் சற்றுநேரம் திறந்து வைத்திருந்தாயோ?

செல்வா:—“ஆம். கதவைத்திறந்தபின் நீ மஞ்சத்தில் படுத்துக்கொண் டிருப்பதைப் பார்த்தபோது அசுத்தமில்லாத - மனதில் மாசில்லாத ஒரு தேவகன்னிகை சயனித்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. ஆ! உன்னைச் சூழ்ந்து மாசற்ற கற்பின் மணம் வீசிக்கொண்டிருக்கிறது. இத்தகைய சுத்தமான விடத்தில் நமது மாசு நிறைந்த அயோக்கியதையின் துர்மணம் இருக்கும் சுவாசத்தைக் கலக்கச்செய்யலாமா என்று சிந்தித்தேன். இரண்டொரு விநாடிகள் திரும்பிச் செல்வதென்றே கருதி யிருந்தேன். ஆயினும் உடனே உன்னைக் காணவேண்டும், கண்டு என்னைப்பற்றிய உண்மையைக் கூறிவிடவேண்டும் என்று கருதினேன்.

ஏனெனில் பின்னுல் என் நடக்கைகளின் உண்மையைத் திடீலென்று நீ கேள்விப்பட்டால் உன் மனதிற்குப் பெருந் துயாம் உண்டாகும். அப்படி நேரிடாமற் றடுக்கவேண்டு மென்பது என் மன நோக்கம். ஆயினும் என் விவரங்களைப் பற்றிய உண்மை விவாத்தை நான் உன்னிடம் கூறமாட்டேன். ஒருபோதும் கூறமாட்டேன். ஆனுல் ஒரே வாக்கியமாய்க் கூறிவிடுகிறேன். என் அன்பார்ந்த ஞானம்பாள்! நீ எவ்வளவு பரிசுத்தமும் நேர்மையான நடக்கையும் உடையவளாக விருக்கிருயோ, அவ்வளவுக் கவ்வளவு

நான் அசுத்த நடக்கையில் அமிழ்ந்திவிட்டிருக்கிறேன்" என்றாள்.

அம் மொழிகளைக் கேட்ட ஞானம்பாள் கதறி யழுது கொண்டே தன் சகோதரியை யணைத்துக்கொண்டவளாய் "வேண்டாம் வேண்டாம். இப்படிக்கூறவே வேண்டாம். நீ பாபகாரியங்களைச் செய்தாலும் அதற்குப் பிராயச்சித்தமும் மன்னிப்புமுண்டு. நீ நிம்மதியாய் என்னிடமிரு. என்னை விட்டுப் போகவேண்டாம்" என்றாள்.

செல்வாம்பாள் "என் அன்பார்ந்தச் சகோதரியே! நீ வீணாய் எனக்கு அப்படிக் கூறுதே. என் வழி முன்னமே திட்டப்படுத்தப்பட்டது. அவ்வழியே நான் சென்றே தீர வேண்டும். ஆயினும் உன் க்ஷேமத்திற்காகப் பிரார்த்தனை செய்ய ஒருபோதும் மறவேன். இனி நான் விடை பெற்றுக்கொள்கிறேன்" என்றாள்.

ஞானு:—உன் சிறிய தந்தையைக் காணமாட்டாயா ?

செல்வாம்பாள் " இல்லை யில்லை. நான் காணலாகாது. அப்படிக் காண்பதாயின் நான் இங்குவர இவ்வளவு இரகசியமும் மர்மமுமான வழியில் பிரவேசிக்க வேண்டியதில்லை. நான் மாறு பெயர் வைத்துக்கொண்டு இப்போது ஜீவித்து வருகிறேன். பெரும்பாலும் இதுதான் நாம் ஒருவரை யொருவர் கடைசியாகப் பார்ப்பதாக விருக்கும்" என்று கூறிவிட்டு இன்னொரு முறை ஞானம்பாளை யாலிங்கனம் செய்துவிட்டு வந்தவழியே போய்விட்டாள்.

ஞானம்பாள் அழுதுகொண்டே மஞ்சத்தில் சாய்ந்து விட்டாள். பிறகு நித்திரை வந்தபோது தான்கண்ட காட்சி முழுமையும் கனவிற் கண்டாள்.

---

## 191-வது அத்தியாயம்.

**ஞானம்பாளுக்குக் கற்பகம் என்பவளும் செல்வாம்பாள் என்பவளும் ஒன்றே யென்று அறிவிக்கப்படல்—நிலவறைகளை அடைக்க ஏற்பாடு—திருமணம் ஊர்ஜிதப்படத் தேவராஜ௶ முதலியவர்கள் திரிபுரம் செல்லல்—பாலனூரில் அச்சுதனும் நீலாட்சியும்—அவர்கள் கெட்ட எண்ணங்கள் நிறைவேறாமல் போனதைப்பற்றிய பிரஸ்தாபம்—ஜீவாம்பாள் கருவுறலும் மறுபடியும் அவள் நடத்தையில் சந்தேகமும்.**

மறுநாட். காலே ஞானம்பாள் சற்று நேரங்கழித்தே படுக்கையை விட்டெழுந்தாள். இவ்விரவு கண்ட காட்சி கனவோ என்று ஐயுற்றாள். மறுபடி சிந்தித்துச் சுவரில் செல்வாம்பாள் வந்த இரகசியவழி யருகிற்சென்று பார்த்தாள். அதன்பிறகு சந்தேகம் தெளிந்து விட்டது.

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு யாவரும் காலைப் போஜனம் செய்து ஆனதும் ஞானம்பாள் நடந்த சங்கதிகளை யெல்லாம் தேவராஜின் தாயாரிடம் கூறித் துக்கப் பட்டாள். அம்மாதும் விசனப்பட்டு ஞானம்பாளுக்குத் தேறுதல் கூறினாள். பிறகு தேவராஜ௶க்கும் மச்சநாதம் பிரபுவுக்கும்கூட அச்சங்கதிகள் அறிவிக்கப்பட்டன. அவர்களும் வியப்பும் மனவருத்தமுமடைந்தார்கள்.

இப்போது செல்வாம்பாளைப்பற்றிய உண்மை ஞானம்பாளுக்கு ஒருவாறு தெரிந்து விட்டிருப்பதால் இனியவளைப் பற்றிய விவரங்களைக் கூறினால் அவள் மனதிற்கு அதிக வேதனை யுண்டாகாதென்றும், பின்னால் யாரேனும் திடீலென்று கற்பகம் என்பவளும் செல்வாம்பாள் என்பவளும் ஒன்றே என்ற உண்மையை ஞானம்பாளிடம் கூறு முன்னம் தாம் அவளிடம் பக்குவமாய் அதைக் கூறி விடவேண்டு

மென்றும் மச்சநாதம் பிரபுவும் தேவராஜனும் எண்ணினூர் கள். ஏனெனில் லலிதாங்கிச் சீமாட்டி தற்கொலை புரிந்து கொண்டது முதல் அவள் சரித்திர சம்பந்தமாய்க் கற் பகத்தின் பெயர் அந்த நாடெங்கும் தெரியும்.

அவ்வாறே ஞானம்பாளுக்கு அச்சரித்திரம் முழுமை யும் கூறப்பட்டது. யாவும் கேட்டபோது அவள் மிக்க துயரமடைந்தாள். அதன் பிறகு நிலவறைகளைச் சோதித் துப் பார்த்தபோது அங்கு கடிதங்கள் வைக்கப்பட்டிருந்த கூடத்திலிருந்து இரகசியமான கண்ணுடிக் கதவிருக்கும் அறைக்குச் செல்லும் வழியின் இடது பக்கம் ஒரு சிறு வழி தோன்றியது. அவ்வழியில் கொஞ்ச தூரம் சென்ற போது ஏறும் படிகளிருந்தன. அப்படிகளின் உச்சியில் ஒரு பலகைக் கதவு இருந்தது. அதுதான் ஞானம்பாள் சயனித்துக்கொண்டிருந்த அறையிலிருந்தது. அந்தச் சுவ ரில் அறையின் பக்கம் பலகைகள் தைக்கப்பட்டுக் கடிதம் ஒட்டப்பட்டிருந்தது.

தேவராஜன் நிலவறைகளை யடைத்து விடும்படி சீக்கிர மாய் ஏற்பாடு செய்து விட்டான். அந்தவேலைகள் நடந்து கொண்டே யிருக்கையில் தேவராஜன், அவன் தாயார், ஞானம்பாள், மச்சநாதம் பிரபு முதலியவர்கள் கமலா புரத்தை விட்டுத் திரிபுரத்திற்குச் சென்றூர்கள். அவர்கள் அந்த நாட்டுச் சட்டப்படி கமலாபுரத்தில் மணம் செய்து கொண்டாலும் தங்கள் மதா சாரப்படி செய்து கொள்ள வேண்டும். திரிபுரத்தில் தங்கள் மதக்கோயில் இருக்கிறது. ஆகையால் அங்கு மணம் செய்து கொள்ளச் சென்றூர்கள்.

* * * *

* * * *

இப்போது நாம் அவர்களை யங்கே விட்டு விட்டுப் பாஞ்சால நாட்டிலுள்ள பாலனூர் என்ற நகரத்தில் அதே

காலத்தில் நடக்கும் சில சம்பவங்களைக் கவனிப்போம். ஜனவரி மாதம் மத்தியில் பிற்பகல் இரண்டு மணிக்குமேல் அந்நகரத்திலுள்ள ஒரு நாணயமான ஹோட்டலின் ஒரு அறையில் கனம் அச்சுதன் மனைவியாகிய நீலாட்சி ஒரு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிறாள். பனிக்கால மாதலால் அவள் எதிரில் நெகிடித்தீ எரிந்து கொண்டிருக்கிறது. அவள் கரத்தில் ஒரு புத்தகம் இருந்தாலும் அவள் என்னவோ ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறாள். பல்லவபுரியில் அவள் மச்சநாதம் பிரபுவிடம் தேவராஜைப்பற்றிக் கலகம் செய்து ஏழுவாரங்களாயின. அவள் தனியே யுட்கார்ந்திருக்கிறாள்.

அவள் புத்தகத்தைக் கரத்தில் பிடித்தபடி சிந்தனையிலேயே யிருக்கையில் அறையின் கதவு திறக்கப்பட்டதும் அவள் கணவனாகிய அச்சுதன் அறைக்குள் வருவதை யவள் கவனிக்க வில்லை. ஆகையால் அவன் திடீலென்று எதிரில் வந்து நிற்பதைக்கண்டதும் திடுக்கிட்டு "ஆ! நீயா! கடைசியில் வந்து சேர்ந்தாயா!" என்றாள். இதனால், இவர்கள் இருவரும் அகௌரவமான உடன் படிக்கையோடு, அதாவது நீலாட்சி தேவராஜை மயக்கி அவனிடம் தனக்குள்ள காதலைத் திருப்தி செய்து கொள்வதென்றும், அவள் கணவன் அச்சுதன் செல்வாம்பாள் மேலுள்ள தன் காதலைத் திருப்தி செய்து கொள்வதென்றும் இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்டு பிரிந்தபின் இன்னும் இருவரும் சந்திக்கவில்லை என்பது நன்கு விளங்கும்.

நேயர்களே! இம்மாதிரி புருடன் மனைவிகள் நம் நாட்டில் எத்தகைய கீழ்ச்சாதியிலேனும் காணக்கிடைப்பாரோ. அந்த மேல் நாடுகளில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதன் காரண மென்ன? இரகசியமாய் அரைமணி நேரத்திற்குள் மணம் நிகழ்ந்து விடும் அவர்கள் ஆசாரமே இதற்குக்கா

ணம். அவர்கள் மணச்சடங்கு நமது மணச் சடங்கைப்போல் புருடன் மனைவிக்குள் உறுதியான பந்தத்தை யேற்படுத்துவதில்லை. இரண்டு சிநேகிதர்களுக்குள்ளாயினும் நாம் இனிப் பிரியமாட்டோம் என்ற நம்பிக்கையும் மன உறுதியுமுண்டு. அவ்வளவு கூட அவர்கள் மணச் சடங்கில் இல்லை.

தன் வரவைக்கண்டு வியப்படைந்த மனைவியை நோக்கி அச்சுதன் "ஏன்? நான் ஏறக்குறைய இந்தக் காலத்தில் பாலனூரில் இருப்பே னென்று உனக்குக் கடிதம் எழுத வில்லையா? அக்கடிதம் உனக்குக் கிடைத்தே யிருக்க வேண்டும்" என்றான்.

நீலாட்சி:—ஆகா. சந்தேகமென்ன? இன்றேல் உன்னைச் சந்திக்க நான் இப்போதிங்கு எப்படி ஆயத்தமாக விருப்பேன்? அதிருக்கட்டும். உன்விவகாரம் எப்படி நிறை வேறியது?

அச்சுதன்:—அடியோடு அபஜயமடைந்தேன். அவமானப் படுத்தப்பட்டேன். திரிபுரத்தில் சிறையிலடைக்கப் பட்டேன் என்று உனக்கு எழுதினே னல்லவா? நான் அவளுக்காக எங்கெங்கோ தேடிப் பார்த்தும் பயனில்லாமற் போய் விட்டது.

நீலா:—சிறையிலடைக்கப்பட்டதை யறிவேன் — தேவராஜைச் சந்தித்தபடியால்--ஆயினும் சீக்கிரம் விடுவிக்கப் பட்டாயல்லவா ?

அச்:—ஆம் ; ஆனால் பிறகு பார்த்தபோது செல்வாம்பாள் தானிருந்த ஹோட்டலை விட்டு எப்படியோ போய் விட்டாள். தேவராஜனும் மறைந்து விட்டான். ஆனால் மறுநாள் நான் அவன் கையால் திருப்தி யடைய வேண்டுமென்று இன்னும் விரும்பினால் பல்லவபுரியில் தன்னைச் சந்திக்கலாம் என்று கடிதம் வரைந்திருந்தான். அக்கடிதம் எங்கிருந்து எழுதப்பட்டது

என்பது மிக்க மர்மமாக விருந்தது. அன்று அவன் கலகக்காரரிடம் சேர்ந்திருக்கிறுன். பின்னுல் அதைப் பற்றி ஊரெங்கும் பெரிய பிரஸ்தாப முண்டாயிற்று.

நீலாட்சி தீட்சணியமான பார்வையோடு "தேவராஜு கடிதத்தைப் பற்றி நீ என்ன ஏற்பாடு செய்தாய்?" என்ருள்.

அச்:—என்ன ஏற்பாடா? ஏன் பேசாமலிருப்பது தான்- அதற்கு இரண்டு மூன்று காரணங்களிருக்கின்றன. முதலாவது நான் முட்டாள் தனமாக நீயும் நானும் செய்துகொண்ட ஏற்பாட்டைப்பற்றிச் செல்வாம்பாளி டம் கூறிவிட்டேன். அவள் அவையாவும் தேவராஜி டம் கூறி விடுவாளென்று நான் அறிந்து கொண் டேன். பிறகு நீ எழுதிய கடிதத்தால் நீ தேவரா ஜின் மேல் வெறுப்படைந்திருக்கிறுய் என்று தெரிந் தது. அதனுல் நீயும் ஜெயமடையவில்லை யென்று தெரிந்து கொண்டேன்.

நீலாட்சி உதட்டைக் கடித்துக்கொண்டு "ஆம் ஆம். நீ இரண்டு மூன்று காரணங்கள் இருக்கின்றன வென்ருயே அவற்றைக் கூறு" என்ருள்.

அச்:—ஆம் இன்னெரு காரண மிருக்கிறது - மற்ற காரணங் களில்லா விடின் அதைநான் சட்டை செய்ய மாட் டேன். நாம் இருவரும் அவன் கையில் சிக்கிக் கொண் டிருக்கிறேம். ஒரு வார்த்தையால் அவன் நமது மானத்தைப் போக்கடித்து விடலாம். நான் நமக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்தைச் செல்வாம்பாளிடம் கூறி யது பெரிய பைத்தியக் காரத்தனமாய் விட்டது. ஒருவன் தன் மனைவிக்குத் துரோகம் செய்துவிடலாம். தன் மனைவியின் அகௌரவமான நடக்கையைக் கவனிக் காமலிருக்கிறுன் என்று கூறப்படலாம். ஆனுல்

தானே தனக்குத் துரோகம் செய்து அன்னியன் காதலுக்கு இடங் கொடுக்கும்படி அனுமதி யளித்தான் என்பது எவனும் சகிக்க முடியாத அவமானச் செய்கை யாகும் என்பதில்சந்தேகமேயில்லை. ஆகையால் அச்சங்கதியை யப்படியே நழுவவிட்டுவிடுவது தான் உசிதமென்று நான் தீர்மானித்துக்கொண்டேன். ஆனால் நீ எப்படி அவனை வசப்படுத்த முடியாமல் தோல்வியடைந்தாய்? அது அப்படி யொழிந்ததே நலமாயிற்று. ஆனால் இதோடு அந்த ஒப்பந்தம் இரத்தாகிவிட்டது. என்று அறிந்து கொள்.

நீலாட்சி கேலியாய் நகைத்துக்கொண்டே "நீ இன்னொரு புதுமாதைக்கண்டு காதல் கொள்கிறவரையில் இரத்தாய் விட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இருக்கட்டும். நீ தேவராஜனைப் பிரபுவுக்குக் கடிதம் வரைந்தாயோ?" என்றாள்.

அச்:—நான் எழுதவேண்டியதே நியாயம். ஏனெனில் நானே அவனைச் சண்டைக்கழைத்தவன். அச்சமயம் அவன் எழுதிய கடிதத்திலிருந்து அவன் பல்லவபுரியிலிருக்கிறானென்று கருதிக் கடிதம் எழுதவே யிருந்தேன். அதற்குள் தேவராஜென்ற ஒரு வாலிபன்-நயனபுரியிலுள்ள இந்திரபுரி மந்திரியின் உத்தியோகஸ்தரில் ஒருவன் - பஞ்சநாதம் பிரபுவின் பட்டத்தையும் ஜாகீரையும் அடைந்தான் என்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன்.

நான் இதில் ஏதோ தவறிருக்க வேண்டுமென்று இரண்டொரு நாட்களில் பெரிய சந்தேகத்திலிருந்தேன். அதற்குள் அதே ஆள் இலக்கபுரியைத் தாக்கிய கலகக்காரரில் சேர்ந்திருந்தவனென்று கண்டறியப்பட்டு அவன் சிறை

செய்யப்பட்டான் என்று தெரிய வந்தது. அதன் பிறகு அவன் இனிச் செத்தவனேயாதலால் அவனைப்பற்றிக் கவனிக்கப்பட வேண்டியதேயில்லை யென்று கருதிக் கொண்டேன். ஆனால் சில நாட்களுக்குள், இதோ பார்! பெரிய ஆச்சரியம்! அவன் அடியோடு மன்னிக்கப்பட்டானென்றும், அதோடு ஜாகீரும் பட்டமும் காயமாக அவனுக்களிக்கப்பட்டன வென்றும் தெரியவந்தது. இனி அவனே பிரியப்பட்டாலன்றிப் பழைய விரோதத்தைக் கிளற எனக்கு விருப்பமில்லை யென்று அவனுக்குத் தெவித்தேன்.

நீலா:—அக்கடிதத்திற்கு அவன் பதில் என்ன வரைந்தான்?

அச்:—அவன் ஒன்றுமே வரையவில்லை. என்? நானும் அவனும் சண்டையிடவேண்டும், நான் உன் காதலை அலட்சியம் செய்த அவ்வாலிபனைச் சுட்டுக் கொல்ல வேண்டுமென்று உனக்கு விருப்பம்போலிருக்கிறது?

நீலா:—உன் காதலை யலட்சியம் செய்து உன்னை யேமாற்றி விட்ட அச்சிறுக்கிமேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று உனக்கு எப்படி விருப்பம் இருக்குமோ அப்படித்தான் எனக்கும் இருக்கும்.

அச்:—ஆம். என் முயற்சி யாவும் வீணாயின. ஆயினும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் நோக்க அந்த விஷயங்களை நாம் மறந்துவிடவேண்டியதே.

நீலா:—இருக்கட்டும். நீ மூன்று காரணங்களிருக்கின்றன வென்று கூறினையே. அந்த மூன்றாவது காரணமென்னவென்று கூறவில்லையே அதென்ன?

அச்:—ஆ! மலையனூருக்குச் சென்ற என் தாயாரும் தந்தையும் வழியில் திரிபுரத்தில் தங்கினார்களென்று நான் உனக்கெழுதியிருந்த கடிதத்தில் கூறியிருந்தேனல்லவா?

நீலா:—ஆம் ஆம். நீயும் தேவராஜனும் சந்தித்த சங்கதியை யவர்கள் கேள்விப் பட்டார்களாக்கும்.

அச்:—ஆம். உண்மையே. அதோடு நான் சிறையிலடைக்கப் பட்டதையும் தேவராஜன் நாட்டை விட்டேகும்படி கட்டளையிடப்பட்டதையும் அவர்கள் கேள்விப்பட்டார்கள். அதைக்கேட்டு என் தந்தை யெத்தகைய மனக்கலக்கமடைந்தார் என்பதை உனக்கு விளங்கும்படி நான் கூறமுடியாது. ஆயினும் என் தாயார் முன் அவர் அதைப்பற்றி என்னிடம் பேசவேயில்லை. ஆனால் என்னைத் தனியே யழைத்துக் கொண்டு போய் நான் தேவராஜிடம் எள்ளளவு பகையும் பாராட்டக்கூடாதென்று கண்டிப்பாய்க்கூறினர். அதோடு 'நீங்கள் முன்பு ஒருமுறை சண்டை யிட்டீர்கள். உங்கள் இருவர் பலாபலமும் அதனாலேயே விளங்கிவிட்டது. அதுவே போதுமான அத்தாட்சி' என்றார். அச்சமயம் நான் என்ன பதில் கூறுவதென்று எனக்குள் உடனே தீர்மானம் செய்து கொள்ளக்கூடவில்லை. ஆகையால் அப்போது எவ்விதமான வாக்குத் தத்தமும் அளிக்க மறுத்து விட்டேன். ஆ! அப்போது அவருக்குண்டான மனவருத்தமும் கோபமும் சொல்லமுடியா. எனக்கு அவருடைய அபிப்பிராயம் இன்னதென்று விளங்கவில்லை. கடைசியில் நான் யாவும் யோசித்து அவர் பிரியப்படி சம்மதித்தபோது, அவர் நான் சம்மதிக்க வேறொரு காரணமுமில்லையென்றும், அவர் வார்த்தைக்கு மரியாதைவைத்தே இணங்கிவிட்டேன் என்றும் எண்ணிக்கொண்டதால், அவருக்குண்டான சந்தோஷத்திற்கு ஓரளவேயில்லை. அவர் என்னிடம் காட்டிய அன்பு மீறியது. இவற்றிற்காக எனக்கே மிக்க வியப்புண்டாய்விட்டது. இன்னும் அது பெரிய வியப்பாகவே யிருக்கிறது. ஏனெனில் அவர் சாதாரண விஷயங்களில் எப்போதும்

அப்படி நடந்து கொள்கிறவரல்ல. ஆகையால் அக்காட்சி எனக்கு மிக்க வியப்பையுண்டாக்கி விட்டது.

நீலா:—"ஆம் அது மிக்க வியப்பே" என்றாள்.

அச்சுதன் "நீ எப்போது பாலனூர் வந்துசேர்ந்தாய்?" என்று தன் மனைவியைக்கேட்டான்.

நீலா:—"நேற்றுத்தான் வந்தேன். இப்போது உண்மையைக் கூறு. நாம் இந்திரபுரிக்குச்சென்றால் உன் மேலிருக்கும் கொலைக்குற்றத்தைப்பற்றி விசாரணை நடந்தால் அதனால் உனக்குக் கெடுதி நேரிடுமென்ற அச்சம் உன் தாய் தந்தையருக்கிருக்கிறதோ?" என்று கேட்டாள்.

அச்:—"என் தாயார்க்கு மட்டுமிருக்கிறது. என் தந்தைக்கு இல்லை. ஆ! என் தங்கை ஜீவாம்பாள் எங்கே? நான் இந்நேரம் உன்னிடம் பேசிக்கொண் டிருக்கிறேன். அவளைப்பற்றிக் கேட்க மறந்து விட்டேன்" என்றான்.

நீலாட்சியுடனே பதில் கூறாமல் இருந்தாள். அவள் முகக்குறியால் அச்சுதனுக்கு மிக்க மனக்கலக்க முண்டாயிற்று. ஒரு சமயம் ஜீவாம்பாள் கிருஷ்ணப்பன் கொல்லப்பட்ட விவரத்தை இவளிடம் கூறிவிட்டாளோ என்று திகிலடைந்தான். "ஏன்? நான் கேட்பது உன் செவியிலேறவில்லையா? என்ன சங்கதி?" என்று மறுபடி தன் மனைவியைக்கேட்டான்.

அவள் ஒருவிதச் சலிப்போடு "ஜீவாம்பாள் தன் அறையிலிருக்கிறாள்" என்றாள். அச்சுதன் "என்னதான் சங்கதி? அவள் அசௌக்கியமாயிருக்கிறாளா அல்லது ஏதேனும் விசேடம் நடந்ததோ?" என்று வினவினான்.

நீலா:—"அவள் சரியான மாதிரியாயில்லை. என்ன நினைப்பதென்று எனக்கு விளங்கவில்லை. என் மனதிலுள்ளதை வெளியிடப் பயமாக விருக்கிறது" என்றாள்.

அச்சுதன் பெருந்திகிலடைந்து "அய்யோ கடவுளே!

என்னதான் சங்கதி? உன் மனதிலிருப்பதைக்கூறு" என்ருன்.

நீலா:—கடந்த மூன்று மாதங்களாக, அதாவது கிருஷ்ணப்பனும் நீயும் சண்டையிட்டது முதல் அவள் ஒருவித மாறுட்ட மடைந்திருக்கிருள்.

அச்:—ஆ! ஏன் அதுபோதாதா அவளை மாறச்செய்ய-அவள் கண்ட காட்சி அவள் மனதைக் கலக்கி விட்டிருக்கும்.

நீலா:—நானும் முதலில் அந்தத் திகிலால்தான் அப்படியிருக்கிருள் என்று கருதினேன். பிறகு வரவர அப்பா! எனக்கு நினைக்கவும் பயமாயிருக்கிறது.

அச்:—அய்யோ தெய்வமே! என்னதான் சங்கதி? வீண் வார்த்தையாடாமல் நீ நினைப்பதைக்கூறு சீக்கிரம்.

நீலா:—கூறினுல் நீ என்மேல் மிக்க கோபங்கொள்வாய். ஒரு சமயம் அது வெறும் உத்தேசமாயிருக்கலாகும்.

அச்சுதன் "எதுவாயிருந்தாலும் இருக்கட்டும்; உன் மனதிற்குப் புலப்படுவதுதானென்ன? கூறு சீக்கிரம்" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

நீலா:—ஒரு சமயம் நான் கூறுவது உண்மையல்லாவிட்டால் நான் அவள்மேல் துவேஷம் கொண்டிருப்பதாக நினைப்பாய். ஆயினும் என் மனதில் தோன்றியுள்ள சந்தேகத்தைக் கூறிவிடுகிறேன். அவள் மறுபடி நடக்கையில் தவறிவிட்டாள். இப்போது கருவுற்றிருக்கிருளென்று தோன்றுகிறது.

இதைக் கேட்டதே அவன் பேரிடி விழுந்தவன் போலாஞன். அவன் முகம் வெளுத்துவிட்டது. தன் வரையில் சுத்த அயோக்கிய நடக்கையுடையவனுயினும் தன் மனைவி அன்னிய புருடனைக் காதலிக்கத் தானே அனுமதி யளித்தவனுயினும் தன் தங்கை மணமாவதன் முன் நெறிதவறினுள் என்பதைக் கேட்க மிக்க கோபமும் வியாகூலமுமடைந்

தான். அவள் நடக்கையால் தன் குடும்பத்திற்கே அவமானம் நேரிடுமென்பதற்கே அவனுக்கு வருத்தமாயிருந்தது.

அவன் தன் மனேவியைநோக்கி "நீ அப்படியா நினைக்கிருய்?" என்ருன். நீலாட்சி "சில சங்கதிகளால் ஒன்ருேடொன்றைச்சேர்த்துச் சிந்தித்தால் அவ்வாறு கருதவேண்டியிருக்கிறது. எப்படியிருந்தாலும் நீ அவளைக் கண்டித்துக் கூறவேண்டாம். அவள் மேல் கோபிக்கலாகாது.

அச்:—நான் அப்படிச் செய்யமாட்டேன். நீதான் அதன் உண்மையை யறிய வேண்டும். அந்த விஷயத்தை யுன் பொறுப்பாய் விட்டு விடுகிறேன்.

நீலா:—நீ அவள் எதிரில் பேசும்போது முகத்தை யொரு விதமாய் வைத்துக்கொண்டிராதே.

அச்:—இல்லை யில்லை. நான் இப்போது அவளைக்காணவில்லை. நான் போய்ச் சற்றுநேரம் உலவிவிட்டு என் மனக் கலக்கத்தை யடக்கிக்கொண்டு வருகிறேன்.

---

## 192-வது அத்தியாயம்

### உலகையனும் அச்சுதனும்—பழைய விவகாரங்கள்.

அச்சுதன் ஹோட்டலிலிருந்து வெளிப்பட்டு வீதியில் இறங்கும்போது ஒரு வண்டி வந்து நின்றதும் அதிலிருந்து ஒரு வேலைக்காரச் சிறுவன் முன்னே இறங்கினுன். பின்னுல் ஒரு நாணயமான வாலிபன் துக்க உடையணிந்துகொண்டு இறங்கினுன். அச்சுதன் அவனைக்கண்டதும் ஆவலோடு "ஹா! உலகையன்! நான் உன்னைத்தான் நினைந்துகொண் டிருந்தேன்" என்ருன்.

வந்தவனும் "ஹா! நானும் உன்னை நினைந்துகொண் டிருந்தேன். நீ போய் உன்னை யொப்புக்கொடுத்துவிட்டுப்

பிணை கொடுக்கக் கருதி யிருக்கிருயோ என்று சிந்தித்துக் கொண் டிருந்தேன்" என்றான்.

அச்:—சந்தேகமின்றி. நீயும் அப்படியே எண்ணியிருக்கிருயோ?

உலகையன்:—ஆம். நடந்த விவகாரத்தில் ஒரு பிசகுமில்லை. எல்லாம் ஒழுங்கின்படியே நடந்திருக்கிறது.

அச்:—ஆகா. சந்தேகமின்றி எல்லாம் ஒழுங்கின்படியேதான் நடந்தது. நீ என் துக்கவுடை யணிந்திருக்கிருய்?

உல:—என் சிறிய தந்தை யிறந்துபோனார்.

அச்:—ஆ! அப்பெரியவர் போய்விட்டாரா? எப்போது?

உல:—இரண்டு மாதங்களாயின. அவரும் என்னோடுகூட அன்னிய நாடுகளில் யாத்திரை செய்ய வந்திருந்தார். ஒரு வாரமே அசௌக்கியமாக விருந்து பாலியில் இறந்து போனார்.

அச்:—சரி; ஆஸ்தி விஷயத்தில் அவர் எதிர்பார்த்திருந்ததற்கு அவ்வளவாக மாறுதலாய் நடந்துகொள்ளவில்லையே.

உல:—இல்லை யில்லை. அவர் மிக்க பெருந்தன்மை யுடையவர்; எல்லாச் சொத்தையும் எனக்கே வைத்து விட்டார். நான் எண்ணியிருந்ததைவிட அதிக ஆஸ்தியேயிருந்தது. எல்லாம் போக மிச்சமிருப்பதிலிருந்து எனக்கு வருடம் எட்டாயிரம் பவுனுக்குக் குறையாத வருமானம் கிடைக்கத்தக்க சொத்திருக்கிறது.

அச்:—உன் அதிஷ்டத்திற்காக நான் மிக்க சந்தோஷம் கொண்டாடுகிறேன். ஆ! உன் வேலைக்காரச் சிறுவன் மிக்க நாணயமும் சுறுசுறுப்பும் உடையவன் என்று தெரிகிறது.

உல:—அப்படியா கருதுகிருய். நான் அவ்வளவாய் அதைப்

பற்றிக் கவனிக்கவில்லை. ஆ! அந்தச் சண்டை விஷயம்-நடக்கப்போகும் விசாரணையைப்பற்றி—.

அச்:—நான் உன்னைச் சந்தித்ததற்காக மிக்க சந்தோஷப்படுகிறேன். அதைப்பற்றி இரண்டொரு சங்கதிகள் நான் கூறவேண்டி யிருக்கின்றன.

உல:—ஏன் என்னை நியாயசபையில் பகிரங்கமாக விசாரிக்க மாட்டார்களே?

அச்:—இல்லை. நியாயவாதிக்கு நீ கூறி விவகாரத்தை நடத்துவதற்காக—

உல:—அப்படியாயின் ஹோட்டலுக்குள் போகலாம் வா. நீ யிங்குதான் தங்கியிருக்கிறுயென்று கருதுகிறேன்.

அச்:—"ஆம் நானும் என் மனைவியும்......" என்று கூறியதும் சட்டென்று வாயை மூடிக்கொண்டான்.

ஏனெனில் 'என் தங்கையும்' என்று கூறப் போனுன். அதற்குள் நடந்திருக்கும் சங்கதிகள் அவன் நினைவிற்கு வந்துவிட்டன. கிருஷ்ணப்பனேடு தான் சண்டை செய்தபோது உலகையன் கிருஷ்ணப்பன் துணைவனுகவிருந்தான். ஜீவாம்பாள் ஆண் வேடந்தரித்துக்கொண்டு கேசவன் என்ற பெயரோடு தனக்குத் துணைவனுக விருந்தாள். இப்போது உலகையன் அவளைச்சந்தித்தால் முகம் குரல் முதலியவைகளால் இவளே அச் சந்தர்ப்பத்தில் ஆண்வேடந் தரித்துக் கொண்டு வந்திருந்தாள் என்று தெரிந்துகொள்வானுகையால் அனேக சந்தேகங்களுக்கு இடமுண்டாகும். உலகையனே மிக்க நேர்மையான நடக்கை யுடையவன். சந்தேகங் கொண்டால் பிறகு விபரீதமாய்விட்டாலும் ஆய்விடலாகும். அதனுல் திகிலோடு வாயை மூடிக்கொண்டான்.

அச்சமயம் உலகையன் வண்டியிலிருந்த தன் வஸ்திரத்தை யெடுத்துக்கொண் டிருந்தபடியால் அச்சுதன் முகத்திலுண்டான கலவரத்தைக் காணவில்லை. அவன் அச்

சுதனை நோக்கி, "அப்பா! இங்கே அதிகமாகக் குளிர்கிறது. சீக்கிரம் ஹோட்டலுக்குள் சென்று ஒரு தனியறையெடுத்துக்கொண்டால் இரகசியமாகப் பேசலாகும்" என்ருன்.

அச்சுதன் "ஆகா! அப்படியே செய்யலாம். நான் உடனே யுன்னை என்மனைவி யிருக்குமறைக்கு அழைத்துச் சென்று அவளை யறிமுகமாக்கி வைப்பேன். ஆனல் அவள் அசௌக்கியமாக விருக்கிருள்" என்ருன்.

உல:—இப்போது தொந்திரவெடுத்துக் கொள்ளவேண்டாம். இன்னொரு சமயம் அக் கௌரவமும் எனக்குக் கிடைக்கும். மேலும் நீ யுடனே இந்திரபுரிக்குச் செல்லப் போகிருய். நானும் அதே உத்தேசம் கொண்டிருப்பதால் இருவரும் ஒன்ருகப் பிரயாணம் செய்யலாம்" என்ருன்.

அச்சுதன் "ஆகா! சந்தேகமின்றி" என்ருன். தனக்குள் "ஜீவாம்பாளை யிங்கேயே விட்டுவிட்டு நிதானமாய்ப் பின்னல் வரும்படி செய்யவேண்டும்; அதுதான் சரியான மார்க்கம்" என்று நினைத்துக்கொண்டான்.

உலகையன் தன் வேலைக்காரச் சிறுவனிடம் ஏதோ சில கட்டளைகளைக் கூறினன். அவன் நயனபுரி நாட்டான். இருவரும் அந்த நாட்டுப்பாஷையில் சம்பாஷித்தார்கள். அவன் பெயர் சீனன் என்று தெரிந்தது. அச்சுதன் சற்று வியப்போடு மறுபடி யவனை நோக்கினன். அவன் முகம் விசேஷமாய் அழகுவாய்ந்த ஒரு பெண்ணின் முகம்போலிருந்தது. அதாவது பெண் தன்மையதிகமாகவிருந்தது. மீசை கொஞ்சமேனும் முளைக்கவில்லை. அவன் மிக்க நாணயமும் நாகரீகமுமுடையவனுக விருந்தான். மேலும் உயர் குடியிற் பிறந்தவன்போல் தோன்றினன். அத்தேசங்களில் அச்சமயம் மிக்க இராஜாங்கக் குழப்பங்கள் நடதுகொண் டிருந்ததால்

உயர்ந்த அந்தஸ்திலிருந்தவர்களில் அனேகர் மிக்க தாழ்மை யான நிலைமைக்குவந்துவிட் டிருந்தனர். சீனனும் அத்த கைய குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவனு யிருக்கும் என்று அச்சுதன் கடைசியில் தீர்மானித்துக் கொண்டான்.

உலகையனும் அச்சுதனும் ஹோட்டலுக்குள் பிரவே சித்து ஒரு அறையில்போய்ச் சேர்ந்ததும் உலகையன் முன்னே கொஞ்சம் சிற்றுண்டி கொண்டுவரும்படி கட்டளை யிட்டான். அவ்வாறே கொண்டுவரப்பட்டதும் இருவரும் அருந்தியபின் உலகையன் அச்சுதனை நோக்கி,

"சற்று நேரத்திற்குமுன் ஏதோ சில சில்லறை விஷயங் களைப்பற்றி என்னிடம் கூறவேண்டுமென் றியம்பினையே. அவை யெவை?" என்றான்.

அச்:—உன் விஷயங்களைப் பற்றியவற்றைக் கவனித்து நடத்தும் பொறுப்பைக் கூட நீ என் வக்கீலிடமே ஒப்பித்து விடுவது மிக்க நலம் என்று கருதுகிறேன். அவரே நம் இரண்டுபேர் விவகாரத்தையும் ஒழுங்காக நடத்துவார்.

உல:—அப்படியே செய்ய எனக்கு எள்ளளவு ஆக்ஷேபனை யும் இல்லை. ஆனால் அச்சமயம் என் சிறிய தந்தை என் விவகாரத்தை அவருடைய வக்கிலே நடத்தவேண்டு மென்று கூறியதும் உனக்கு நினைப்பிருக்கலாம்.

அச்:—உண்மையே. ஆனல் அவர் கூறியது ஜாமீன் கொடுப் பது முதலிய விஷயங்களைப் பற்றி-எப்படியாயினும் உன் பிரியம் எப்படியோ அப்படியேசெய். கடைசியில் எல்லாம் ஒழுங்காகவே முடியும்.

உல:—"ஆ! ஒரு சங்கதி" என்று கூறியதும் தன்நகைப்பை யடக்க முடியாமல் கலகலவென்று நகைத்தான்.

அச்:—நண்பனே! நீ இவ்வளவு சந்தோஷமான நிலைமையி லிருப்பதைக்கான நானும் மிக்க குதூகல மடைகி

றேன். ஆனால் உனக்கு இத்தகைய நகைப்பை யுண்டாக்கிய விஷயம் யாதோ என அறிய விரும்புகிறேன்.

உல:—அந்தச் சண்டையில் சம்பந்தப்பட்டிருந்த ஒரு ஆளின் அதிசயத்தைப் பற்றி நான் நினைத்துக் கொண்டேன். அந்த ஆளை நீ நீதிச்சபைக்குக் கொண்டுவர விரும்ப மாட்டாய் என்றே நம்புகிறேன்.

இதைக்கேட்டதே அச்சுதன் மிக்க கலக்க மடைந்து "என்ன நீ கூறுவதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லையே" என்று பெருந்திகிலோடு கேட்டான்.

உல:—"என்ன அர்த்தமா? ஏன்? உன் துணைவனாக நீ அழைத்து வந்தாயே கேசவன்? அவனைப் பற்றித் தான்" என்று கூறி மறுபடி அதிகமாய் நகைத்துக் கொண்டு ஆசனத்தில் சாய்ந்து விட்டான்.

அச்சுதன் முகத்தில் இரத்தம் குபீலென்றேறியது. என் செய்வான், தன் கோபத்தையும் வெட்கத்தையும் அடக்கிக் கொண்டு "இதென்ன சங்கதி? உன் அர்த்தம் தான் என்ன? உனக்கு இத்தகைய நகைப்பையுண்டாக்கிய காரணம் என்ன?" என்றான்.

உல:—"அது மிக்க நேர்த்தியான விஷமே. மிக்க சமார்த்தியமும் புத்தி சாதுரியமுமான செய்கை. ஒரு பெண்ணுக்கு ஆண்வேடந்தரித்துச் சண்டையில் உன் துணையாளா யழைத்து வந்தது - அதனாற்றான் விவகாரம் வெளிக்கு வந்தபோது கேசவன் என்பவன் வெளி வராமல் மாயமாய் மறைந்து விட்டான்" என்று கூறி மறுபடி கலகலவென்று நகைத்தான்.

இவற்றைக் கேட்ட அச்சுதன் நாமும் கேலியாய் நகைப்பதே நலமென்று, நகைப்பவன்போல் அபிநயித்து, "உண்மை உனக்குத்தெரியாது -உனக்கு அதற்குமேல் ஒரு ஐயமும் தோன்றவில்லை - சந்தேகந்தானே?" என்றான்.

உல:—பின்னல் நடந்த சங்கதி யுனக்குத் தெரிந்தால் இப்படிக் கூறமாட்டாய்.

அச்:—பின்னல் நடந்ததா? நாம் இருவரும் வெளி நாட்டிற்கு வந்து விட்டோம். ஒருவர் போன வழி ஒருவருக்குத் தெரியாது; தற்செயலாய் மறுபடி சந்தித்தோம்.

உல:—இல்லை. வேறுவிஷயம் நடந்திருக்கிறது.

அச்:—வேறு விஷயமா? எனக்குத் தெரியாமல் என்று நீ கருதுகிருய். அது எனக்குத் தெரிந்திருந்தாலும் இருக்கலாம்.

உல:—நான் அதிகமாகக் கூறுவது சரியல்லவென்று கருதுகிறேன். இப்போதே அளவு மீறிக் கூறிவிட்டேன். அந்த நினைப்பு என் மனதிலிருந்ததால் கூறினேன்.

அச்:—நீ கூறுவதால் கெடுதி யொன்றும் நேரிடாது; நாம் நண்பராய் விட்டோம்; இச்சங்கதி யுனக்கு இவ்வளவு சந்தோஷத்தை யளிக்கும்போது நான் என் அதில் ஒரு பாகத்தை யனுபவிக்கலாகாது?

உல:—அப்படி யுண்மையாகவே யென் மனதிலிருப்பதை நீ யறியவேண்டுமாயின் முதலில் உன்னை யொரு கேள்வி நான் கேட்க விரும்புகிறேன்.

அச்:—"ஆகா கேள்" என்ருன்.

தன் தங்கையைப் பற்றிய இச் சங்கதியைக் கேட்கும்போது அவன் மனம் என்ன நிலைமையிலிருக்கு மென்பதை யிதை வாசிப்போரே யறிந்து கொள்ளலாம்.

உல:—நீ ஆண்வேடம் தரித்தழைத்து வந்த அப்பெண் கேளிக்கையாகக் காலங்கழிப்பவள் என்று தெரிகிறது. ஒரு சமயம், உன் வைப்பாட்டியா யிருக்கலாம். அல்லது நீ அச்சமயத்திற்கு மட்டும் அழைத்து வந்தவளாக விருக்கலாம்.

இவற்றைக் கேட்டபோது அவன் மனம் தீப்பற்றி

யெரிந்தது. ஆயினும் தனக்குள் யாவும் அடக்கிக்கொண்டு, "அப்புறம் உன் அபிப்பிராயத்தைத்தான் கூறு பார்ப்போம்" என்ருன்.

உல:—அப்படியாயின் என் அபிப்பிராயம் தவருனதல்லவென்று தெரிகிறது. இப்போது நான் உன்னைக் கேட்கும் கேள்வியாவது, நீ அவளோடு நிலையான சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிருயா என்பதே.

அச்:—ஆம் என்று நான் கூறினுலோ?

உல:—அப்படியாயின் நான் இதற்குமேல் ஒன்றுமே கூறலாகாது.

அச்:—அப்படிக்கின்றி எனக்கும் அவளுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. அன்றைக்குப்பின் இந்த மூன்று மாதங்களாக நான் அவளைக் காணவேயில்லை. இனியும் காணச் சந்தர்ப்பம் நேரிடா தென்றும், இதுவேயிருக்கிற உண்மை யென்றும் கூறினுலோ?

உல:—நீ இவ்வளவும் கூறினுல் இதுவே உண்மை யென்று நான் கருதுவேன்.

அச்சுதன் உண்மையாகவே மிக்க அலட்சியமாய் நகைப்பவன் போல் அபிநயித்து "இதுவே இருக்கிற உண்மை. இனி நீ தாராளமாக உன் மனதிலிருக்கிற விஷயங்களைக் கூறலாகும்" என்ருன்.

உல:—அன்று நான்சம்பந்தப் பட்டவரையில் நடந்த விவகாரங்கள் மிக்க வேடிக்கையானவைகளே; ஆனுல் அதிருப்தியானவையல்ல. சண்டை முடிந்தபின் நாம் எவ்வாறு பிரிந்தோம் என்பது உனக்கு நினைவிருக்கிறதா?

அச்:—ஆகா; கிருஷ்ணப்பன் மடிந்ததே உங்கள் இருவரையும் ஓடி விடும்படி கூறினேன்.

உல:—ஆ! நாங்கள் வெவ்வேறுதிக்காய் ஓடி விட்டோம். ஆயினும் மறுபடி சந்தித்தோம்.

அச்:—ஆ! சந்தித்தீர்களா! ஆனால் அன்றல்ல-பிறகு.

உல:—இல்லை; அந்த இரவே; அதுவும் சண்டை நடந்த விடத்திற்கு அதிக தூரத்திலல்ல. ஆனால் நீ அதைப் பற்றிப் பிறகு கேள்விப் படவே யில்லையா?

அச்:—எப்படிக் கேள்விப்படுவேன்? அன்று முதல் இன்று வரையில் உங்கள் இருவரில் ஒருவரையும் நான் சந்திக்க வில்லையே.

உல:—அக்கன்னிகை மிக்க மனக்கலக்கத்தோடும் பிரமை யோடும் ஒரு இடத்தில் சோர்ந்து நின்றிருந்தாள். நான் அருகிலிருந்த ஒரு வீட்டிற்கு அவளை யழைத்துச் சென்றேன். அப்போதும் நான் அவள் உண்மையை யறியவில்லை. அவள் கேசவனென்னும் சிறுவனே யென்றும் ஆனால் இன்னும் மனவல்லமை யடையாத கோழைத்தனமுடைய வாலிபனென்றுமே கருதினேன். உண்மையில் நான் அழைத்துச் சென்ற வீட்டில் என் வைப்பாட்டி யிருக்கிறாள்.

அச்:—ஆகையால் நீ அப்பெண்ணை யவளிடம் ஒப்பித்து விட்டாய் போலும்.

உல:—என்ன அவசரமாய்ப் பேசுகிறாயோ? அப்படி யொன்றும் நடக்கவில்லை. அப்போது அவள் பெண்ணென்று எனக்குத் தெரியாதே. அந்த வீட்டில் காலியாக ஒரே அறைதானிருந்தது. நாங்கள் இருவரும் அங்கே சயனிக்க நேர்ந்தது. அதற்குமேல் அப்பெண் தன் மாறு வேடத்தை மறைக்க முடியவில்லை. அப்புறம் இன்னமும் விவரித்துக் கூறவேண்டுமா, மற்ற சங்கதிகளை நீயே யறிந்து கொள்ளலாம்.

அச்:—இல்லை. இல்லை. எனக்கு விளங்கவில்லை. உன் வாக்காலேயே நடந்ததைப் பூரணமாகக் கூறிவிடு.

உல.—நீ அவ்வளவு தெரிந்து கொள்ளவில்லையா ? எனக்கு அந்தச் சண்டையைக்கண்டது மனதிற்குக் கலக்கமும் சோர்வுமாகவே யிருந்தது. அப்படிப்பட்ட சமயத்தில் சந்தோஷமளிக்க ஒரு சமயம் வாய்த்தால்....

அச்:—கிடைத்ததே அதிஷ்டம் என்றெண்ணிக்கொண்டாயோ?

உல:—ஆம். அப்பெண் நாணமுடையவளாகவே தோன்றினாள். ஆனால் அது நடிப்பேயென்று எனக்குத் தெரியும். அப்படி ஆண்வேடந் தரித்துக்கொண்டு அத்தகைய விஷயத்தில் பிரவேசிக்கும் ஒருபெண்ணினிடம் கற்பு எங்கேனுமிருக்குமோ? ஆனாலும் ஒரு விஷயம் எனக்கு மிக்க வியப்பையளித்தது.

அச்:—அதென்ன ?

உல:—மறுநாள் காலை அவள் என் வேலைக்காரியிடம் உன் மனைவிக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பினாள். நீயொருசமயம் உன் மனைவிக்கு அப்பெண்ணை யறிமுகமாக்கியிருப்பாய்.

அச்:—"இருக்கும் அப்படித்தான் எதுவோ நடந்திருக்கும். நான் இப்போது உன்னைவிட்டுச் செல்ல வேண்டும். நகரத்தின் வடபால் ஒருவரைக் காணவேண்டும். மாலை மறுபடி சந்திக்கலாம்" என்று கூறிவிட்டு எழுந்தான். உலகையன் "எனக்கு இங்கு ஒருவரும் அறிமுகமில்லை. ஆகையால் அரைமணி நேரமாவது நீ வந்து என்கூட இருந்தால் நான் சந்தோஷமடைவேன்" என்றான்.

---

## 193-வது அத்தியாயம்

அச்சுதனும் உலகையனும்--அச்சுதனும் ஜீவாம்பாளும்— உலகையனின் வேலையாளான சீனனின் வேவு— அச்சுதனும் நீலாட்சியும்—ஜீவாம்பாளைக்கெடுத்தவன் உலகையன் என்று அச்சுதன் அறிந்து இருவருக்கும் மணஞ்செய்விக்க ஏற்பாடு செய்தல்—யாவரும் இந்திரபுரி செல்லல்.

உலகையனும் அச்சுதனும் அறைக்குள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் உலகையனுடைய வேலைக்காரனாகிய சீனன் என்பவன் சாமான்களைக் கீழே யிருந்து தன் அறைக்கு எடுத்துச்சென்று கொண்டிருந்தான். அவன் ஒரு தாழ்வார வழியாகச் செல்லும்போது அருகிலுள்ள ஒரு அறையிலிருந்து ஒரு கன்னிகை வருவதைக் கண்டான். அவள் அருகில் வரும்போது அவளுக்கு வழிவிடுவதற்காக அவன் மரியாதையாய் விலகி நின்றான். அவன் அவள் முகத்தைக்கண்டதே திடுக்கிட்டான். அவள் முகத்தைத் தான் அறிந்திருப்பதாய் அவனுக்குப்புலப்பட்டது. உடனே அவன் முகத்தில் ஒருவித மாறுதலுண்டாயிற்று. அப் பெண் அவனை நன்றாய்ப் பார்க்கவில்லையாதலின் அவன் முகத்திலுண்டான மாறுதலைக்காணவில்லை. அவள் படிகளின் வழியாகக் கீழே யிறங்கிச்செல்லும்போது, அச்சுதன் படிகளின்மேலேறி வருகிறான். அவன் அவளைக் கண்டதும் “ஆ ஜீவாம்பா! உன்னையே காணவருகிறேன். நாம் பேசவேண்டிய ஒரு விசேஷ சமாசாரமிருக்கிறது” என்றான்.

தன் தமையன் கூறியதைக் கேட்டதே ஜீவாம்பாள் மிக்க திகிலடைந்து “என்னிடமா பேசவேண்டும்?” என்றாள். அச்சுதன் “ஆம்; உன் அறை யெங்கே யிருக்கிறது?

நாம் இரகசியமாகவே பேசவேண்டும். நீலாட்சி எதிரில் பேச எனக்குப் பிரியமில்லை" என்றான்.

ஜீவாம்பாள் மிக்க பீதியும் துயரமுமடைந்தாள். அவள் தன் அறைக்குத் திரும்பினள். முன்னே அவளும் பின்னால் அச்சுதனுமாக அவள் அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டார்கள். உலகையனுடைய வேலையாளான சினன் ஜீவாம்பாள் நடக்கையை வேவு பார்ப்பதற்கு அவன் மனதில் ஏதேனும் விசேஷ சமாசாரமிருக்கிறதோ அல்லது அதிகப்பிரசங்கித்தனமாய் அன்னியர் விவகாரங்களில் பிரவேசிக்கின்றவனோ நாம் இப்போது கூறமுடியாது. ஆனால் அவன் நடக்கையை மட்டும் கூறுகிறோம்.

அதாவது அச்சுதனும் அவன் தங்கையும் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டதும் தாழ்வாரத்தின் கோடியில் மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருந்த சினன் துரிதமாக அக்கதவருகில் சென்று நின்று அதிலுள்ள துவாரத்தில் செவியை வைத்துக் கூடியவரையில் அவர்கள் பேசுவதையெல்லாம் உற்றுக்கேட்டான்.

சினனைக் கதவருகில் கேட்கவிட்டு அறைக்குள் நடக்கும் சம்பாஷணையைக் கவனிப்போம். இருவரும் உள்ளே சென்றுட்கார்ந்ததும் அச்சுதன் தன் தங்கையைத் திடுக்கிடச்செய்தால் அவள் நடந்த உண்மையை யுடனே ஒப்புக் கொள்ளும்படி செய்யலாம் என்று கருதித் தன் தங்கையை நோக்கி, "ஓ துரதிஷ்டம் பிடித்தபெண்ணே! நீ மறுபடி கர்ப்பமாயிருக்கிறாய்" என்றான்.

இதைக்கேட்டதே ஜீவாம்பாள் முகங்கருத்து பதில் என்ன கூறுவதென்று விளங்காமல் பிரமிப்போடு விழித்தாள். ஒரு வார்த்தையும் அவளால் கூறமுடியவில்லை. அச்சுதன் "ஆம் நான் கூறுவதுண்மை யென்று நீ அறிவாய். ஆயி

னும் மோசமில்லை. காரியம் மிஞ்சிப்போகவில்லை. இன்னும் சரியான மாதிரியாய் நடந்துகொண்டால் நீ கௌரவமான மனைவியாய் விடலாம். இது மட்டுமல்ல. உன் கர்ப்பத்தி லிருக்கும் குழந்தையின் தந்தையையே நீ மணம் புரியலாகும்'' என்றான்.

ஜீவாம்பாள் "ஆ! உனக்கெப்படி இச்சங்கதி தெரிந்தது?'' என்று கேட்டாள். அச்சுதன் "நான்முதலில் ஒன்று கேட்கிறேன். அதற்கு உண்மையான விடைகூறு. உன் கருப்பத்தில் இருக்கும் குழந்தையின் தந்தை உலகையன்றனே?'' என்றான்.

ஜீவாம்பாள் பின்னும் மிக்க வியப்படைந்து "ஆ! அது உண்மையே. உனக்கு எல்லாச் சங்கதியும் தெரியுமென்று அறிகிறேன். ஆனல் எப்படித்தெரிந்தது?'' என்றாள்.

அச்:—உலகையன் இங்கு வந்திருக்கிறான். சற்று முன்பு தான் வந்தான். நான் அவனைக் கண்டுபேசினேன். ஒரு சங்கதி நான் உன்னைக் கேட்கிறேன். நீ அவனிடம் அந்த இரவைக்கழித்து மறுநாள் நீலாட்சிக்கு அவன் வேலையாள் மூலமாகக் கடிதம் அனுப்பினயா?

ஜீவா:—ஆம். அனுப்பினேன். என்னத்திற்கெனில் நான் ஒரு மரியாதையான விடத்தில் இரவுதங்கி விட்டேனென்றும், நான் நடந்த சண்டையைப் பற்றிக் கேள்விப்பட்டதால் மிக்க மனோ வேதனை யடைந்து அவளிடமே தங்கிவிட்டதாக நம் தாய் தந்தையருக்கு அவள் கூறவேண்டுமென்றும் அக்கடிதத்தில் எழுதியிருந்தேன்'' என்றாள்.

அச்சுதன் "சரி. அவள் அவ்வாறே வெளியிட்டாள். அவளுக்கு மற்ற சங்கதிகள் தெரியாவென்று உனக்கு நிச்சயமாகத் தெரியுமல்லவா?'' என்றான்.

ஜீவா:—ஆகா. சந்தேகமின்றி ஒன்றுமே தெரியாது. என்ன என் அவமானமான சங்கதிகளை யெல்லாம் நான் அவளிடம் கூறியிருப்பேனென்று நினைக்கிறாய். அவள் ஏதேனும் சந்தேகம்கொண் டிருக்கிறாளோ?

அச்:—அவள் நீ கருப்பவதியா யிருக்கிறாயென்று சந்தேகங் கொண்டிருக்கிறாள். ஆகையால் அவளிடம் உண்மையைக் கூறியே தீரவேண்டும்.

ஜீவாம்பாள் மிக்க பீதியோடு, "என்ன? எல்லா வற்றையுமா கூறப்போகிறாய்? நீ என்னிடம் இரகசியமாக ஒரு கெட்டித்த துப்பாக்கியைக் கொடுத்து நீ கிருஷ்ணப்பனைச் சுடும்போது உன் குறி தவறிவிட்டால் உடனே நான் அவனைச் சுடவேண்டுமென்று கூறியதையும், அவ்வாறே உன் குறி தப்பிப்போக நானே அவனைச் சுட்டுக்கொன்றேன் என்பதையும் கூடவா நீலாட்சியிடம் கூறப்போகிறாய்? அந்தோ! உலகையன் நீங்கள் இருவரும் சுட்டதன் பிறகு மூன்றாவது ஒருவர் சுட்டதுபோல் சத்தம் கேட்டதாக முன்னமே கூறியிருக்கின்றான்" என்றாள்.

தன் தங்கை ஆத்திரத்தோடு கெட்டியாய்ப் பேசுவதைக்கேட்ட அச்சுதன் "ஓ மூடப்பெண்ணே! உன் வாயை மூடு" என்றான். ஜீவாம்பாள் ஆ! நான் ஆத்திரப்பட்டு முட்டாள் தனமாக இப் பயங்காமான குற்றத்தை யென் வாயினாலேயே வெளியிட்டுவிட்டேன். இத்தகைய பயங்கா இரகசியத்தைக்கேட்கச் சுவர்களுக்கும் செவியிருக்கும் என்ற பழமொழியை மறந்து விட்டேன்" என்றாள்.

அச்:—"சாக்கிரதையாகப் பேசு. அந்த ஒரு பயங்கரமான இரகசியம் நீலாட்சிக்குக்கூட ஒரு போதும் தெரியலாகாது. அது நம் மிருவர்க்குள்ளேயே எப்போதும் இருந்து மடியவேண்டும். நீ உலகையனை மணம் புரிய நேர்ந்தால் பிறகும் இந்த இரகசியம் மட்டும்

அவனுக்குத் தெரியாமலிருக்கும்படி நீ மிக்க ஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளவேண்டும். நீலாட்சிக்குக் கூற வேண்டுமென்று நான் கூறியதென்ன வெனில், இந்த இரகசியத்தைப்பற்றி யல்ல; உனக்கும் உலகைய னுக்கும் நேர்ந்த சம்பவங்கள் யாவும் அவளுக்குக் கூறப்படவேண்டும். ஏனெனில் பின்னுல் அவனே வழிக் குக் கொண்டுவந்து நமது எண்ணப்படி அவன் உன்னே மணம் செய்யச் செய்வதில் நீலாட்சியின் உதவி நமக்கு வேண்டியதாக விருக்கும். நீ அவனே மணம் செய்துகொள்வதால் பெரும்பாலும் அனுகூலமே யன்றி வேறில்லே. அவன் பிரபு வமிசத்தைச் சேர்ந் தவனல்லவென்பதும் பட்டம்பெறப் போகிறவனல்ல வென்பதும் உண்மையே. ஆனுல் அவன் சிறிய தந்தை யிறந்துபோய்விட்டார். அவர் தமது சொத்து முழுமையும் உலகையனுக்கே வைத்து விட்டார். அவர் சொத்துக்கள் வருடம் ஒன்றுக்கு எண்ணுயிரம் பவுன் வருமான மளிக்கத்தக்கவை. ஆகையால் செல் வத்தை மட்டும் கருதும்போது உனக்கு அனுகூல மான சம்பவமே. ஆனுல் மணம் முடிந்த ஆறு ஏழு மாதங்களுக்குள் நீ பிரசவிப்பது தான் ஒரு அசிங்க மான சம்பவம்.

ஜீவா:—என் வாழ் நாளே அகௌரவமாகவும் துக்கமாக வும் அமைக்கப்பட்டிருக்கிறது. அன்று அத்தகைய பயங்காமும் கோரமுமான சம்பவம் நேர்ந்த சில நாழி கைகளுக்குள், நான் சிற்றின்ப ஆசைகொண்டு மன விருப்பத்தோடு அவ்வாலிபனது காதலுக்கிணங்கிவிட் டிருப்பேனென்று நீ நினைக்கிருய்? அய்யோ! என் சுபாவ குணத்தில் அத்தகைய அயோக்கியதையா இருந்தது? அப்படி நீ நினைக்கிருயா? ஒருகாலுமில்லே.

நடந்த சம்பவங்களால் என் மனோவல்லமை நசுக்கப்பட்டுப் போயிற்று. என் மனதில் திகிலும் பலவிதக் கலவரமும் குடிகொண்டிருந்தன. அதோடு நான் அவ்வாலிபன் கையில் மூடத்தனமாய்ச் சிக்கிக்கொண்டேன். "நீ என் விஷயத்தில் பெருந்தன்மையோடும் நீதியோடும் நடந்துகொள்ளவேண்டும். நான் தெய்வ சங்கல்பத்தால் உன்னிடத்தில் சிக்கிக்கொண்டேன். என் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்று எவ்வளவோ வேண்டிக்கொண்டேன். அவனோ என் வார்த்தைகளைக்கேட்டு நகைத்துக் கேலி செய்தான். வெளியிலோ போலீஸார் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வீட்டிற்குள்ளேயே ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவன் அந்த வீட்ட்டிலிருந்த காரியஸ்தி கூறியதுபோல் விருந்தாளியாக வந்து தங்கியிருக்கிறானோ வேவு பார்க்க வந்திருக்கிறானோ நான் கூறமுடியாது. அப்படிப்பட்ட சமயத்தில் நான் என்ன செய்வது? என் மனதில் என் காத்தால் கொல்லப்பட்ட கிருஷ்ணப்பனுடைய உருவம் எதிரில் நிற்பது போலிருக்கிறது; ஒருபக்கம் நியாயாதிபதியின் விசாரணைச்சபையும் எதிரில் தூக்கு மரமும் கண் முன் இருப்பவைபோல் தோன்றுகின்றன. அன்பார்ந்த தமையனாரே! அத்தகைய சந்தர்ப்பத்தில் நான் சத்தமிட உதவாது. நான் அங்கிருக்கிறதாகவே காட்டிக்கொள்ள முடியாது. நான் என்ன செய்ய முடியும்?

அச்.—போதும் போதும். இன்னும் அதிகமாகக் கூறவேண்டாம். ஒரேயொரு கேள்வி? அவன் பலவந்தத்தை யுபயோகித்தானோ?

ஜீவா:—அப்படியானால் அத்தகைய சந்தர்ப்பத்தில் நான் என் மனதார நான் உடன் பட்டிருப்பேனென்றும் நான் அத்தகைய அயோக்கிய நடக்கை யுடையவ

ளாகத்திரும்பி விட்டேனென்றுமா நீ எண்ணிக்கொண் டிருக்கிறாய்?

அச்:—சரி; இப்போது அவன் கட்டாயம் உன் கணவ னாகும்படிசெய்யவேண்டும் என்பது உண்மையாய்த் தெரிகிறது. நானும் நீலாட்சியும் நாளைக் காலை இதை விட்டுப்புறப்பட்டு இந்திரபுரிக்குச் செல்கிறோம். நீ மறுநாள் புறப்பட்டு வரலாம். மற்ற சங்கதிகளையெல் லாம் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்.

அதன்மேல் தங்கையும் தமையனும் இன்னும் சற்று நேரம் தாங்கள் நடந்து கொள்ளவேண்டிய விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்தார்கள். ஆனால் அதைப்பற்றி நாம் கூற வேண்டிய அவசியமில்லை. கடைசியில் அச்சுதன் அறையி னின்று வெளிப்பட்டுக் கதவினருகிற் செல்லும்போது வெளி யிலிருந்து இவர்கள் பேசியதைக் கூடியவரையில் உற்றுக் கேட்டுக்கொண் டிருந்த சீனன் சட்டென்று ஓடிப்போய் விட்டான்.

அச்சுதன் நேராகத் தன் மனைவியிடம்சென்று, அவள் ஜீவாம்பாளைப்பற்றி ஐயங்கொண்டது உண்மையே யென் றும், இரண்டா முறையவளைக் கற்பழித்தவன் உலகையன் என்பதையும், அதைப்பற்றிய விவாதத்தையும், அது விஷய மாகத் தான் செய்ய உத்தேசித்திருக்கும் ஏற்பாடுகளையும், யாவும் விவரமாகக்கூறி, "நான் அவனை யழைத்து வந்து உனக்கு அறிமுகமாக்கிவைக்கிறேன். நீ யவனை மிக்க மரி யாதையோடும் அன்போடும் வரவேற்கவேண்டும். அத்தந் திரத்தைப்பற்றி நான் உனக்கு அதிகம் கூறவேண்டுவ தில்லை. நாம் காலையில் இந்திரபுரிக்குப் புறப்பட்டு விட வேண்டும். அவன் நம் கூட வருவான். ஜீவாள் மறுநாள் வருவாள். அவள் இங்கிருப்பது இப்போது அவனுக்குத் தெரியலாகாது. அப்படித் தெரிந்தாலும் அவள் அசௌக்

கியமாக விருப்பதாய்க் கூறி இருவரும் சந்திக்காதபடி செய்யவேண்டும். அவள் இந்திரபுரிக்கு வந்தபின்பு அங்கு தான் அவன் அவளைக்காணச் செய்யவேண்டும். இங்கு அவனுக்கு உண்மைச் சங்கதி தெரிந்துவிட்டால் நமது பய முறுத்தலுக்கு இந்நாட்டில் அவன் அஞ்சமாட்டான். காரி யமே கெட்டுவிடும்” என்றான்.

புருடனும் மனைவியும் அதுவிஷயமாக நடந்துகொள்ள வேண்டியமாதிரியைப்பற்றி நன்றாய் விவரமாக ஆலோசனை செய்துகொண்டார்கள். அதன் பிறகு பகல் போஜனம் நடந்ததே உலகையனைப் பிற்பகல் தங்களோடு சிற்றுண்டி யருந்தவரும்படி அச்சுதன் அழைப்புச் சீட்டனுப்பினான். உலகையன் சந்தோஷத்தோடு அவ்வாறே வந்தான்.

நீலாட்சி ஆடவரை மயக்குவதில் மிக்க சாமார்த்திய முடையவள் என்பது நமது நேயர்கள் அறிந்த விஷயமே. ஆகையால் அவள் உலகையனை மிக்க உபசாரத்தோடு வா வேற்று அன்போடு நடந்துகொண்டாள். உலகையன் அவள் தந்திரமாய் வீசிய மாயவலைக்குள் சிக்கிக்கொண் டான். அவள் எதிரிலிருப்பதும் அவளோடு சம்பாஷிப்ப தும் அவனுக்கு என்றும் உணர்ந்திராத ஆனந்தத்தை யளித்தன.

மறுநாட்காலை அச்சுதனும் அவன் மனைவியும் பால னூரை விட்டு இந்திரபுரிக்குப் புறப்பட்டார்கள். உலகையன் அவர்கள் கூடவே சென்றான். அவன் வேலையாளாகிய சீன னும் அவன் கூடவே சென்றான். ஜீவாம்பாள் பாலனூரி லேயே யிருந்தாள்.

இந்திரபுரிபோய்ச் சேர்ந்ததும் உலகையன் ஹோட்ட லில் போய்த் தங்கினான். அச்சுதனும் அவன் மனைவியும் தாங்கள் வசித்துக் கொண்டிருந்த வீட்டிற்குச் சென்றார்

கள். மறுநாள் ஜீவாம்பாளும் அவர்களிடம் வந்து சேர்ந்தாள்.

அச்சுதன் இனி நமது உத்தேசத்தை நிறைவேற்ற முயலவேண்டியதே யென்று கருதி உலகையனைக் காணச் சென்றான். நீலாட்சி தன் பெரிய தந்தையாகிய லாயர் தம்பு சாமிபிள்ளையின் வீட்டிற்குச் சென்று அவன் மனைவியோடு கூட சிறைச்சாலையிலிருக்கும் தன் பெரிய தந்தையைக் காணச்சென்றாள். தம்புசாமிப்பிள்ளை கிழவியைக் கொன்ற குற்றத்திற்காகச் சிறையிலடைக்கப் பட்டிருக்கிறான்.

---

## 194-வது அத்தியாயம்.

**சிறைச்சாலையில் தம்புசாமிப்பிள்ளை—தம்புசாமிப் பிள்ளையின் மனைவியும் நீலாட்சியும் அவனைச் சந்தித்தல்—நீலாட்சியின் இரகசிய ஒப்பந்தம்—அச்சுதனும் உலகையனும்.**

தம்புசாமிப்பிள்ளையின் மனைவியைப்பற்றிய சொற்ப விஷயங்களே இதுகாறும் கூறி யிருக்கிறோம். அதோடு அம்மாதைப்பற்றிக் கூறிக் கொஞ்சகாலமாய்விட்டது. ஆகையால் இப்போது அவளைப்பற்றிய சில விவகாரங்களைக் கூறிவிட்டுப் பிறகு கதையைத் தொடருவோம். அம்மாதுக்கு இப்போது வயது ஐம்பதுக்குமேல் அறுபதுக்குள்ளிருக்கும். அவள் தன் கணவனைவிடப் பத்து வயது குறைந்தவள். அவர்கள் வாலிபவயதிலேயே மணம் செய்து கொண்டார்கள். அம்மாது நல்ல நாகரிகமும் நாணயமுமுடைய நடையுடைய பாவனைகளை யுடையவள். கௌரவம் பொருந்திய உயர் குடியிற் பிறந்தவள்.

அவள் தம்புசாமிப் பிள்ளையை மணந்து முப்பத்தேழு வருடங்களாயின. இவ்வளவு காலம் அவன் சகவாசத்தி

விருந்தவரையில் அவன் அசுத்த மனதின் குணங்களில் சில வேனும் அவளுக்குப் படியாமற்போமா. ஆயினும் அவன் தன் அயோக்கிய நடக்கைகளில் பெரும்பாலானவற்றைத் தன் மனேவியறியாவண்ணம் மறைத்தே வைத்திருப்பது வழக்கம். விதியின்றி அவளிடம் கூறவேண்டி யவசிம் நேரிட்டவற்றை மட்டுமே கூறுவான். இதனுல் அவன் சிறை செய்யப்படுகிறவரையில் அவன்மேல் அத்தகைய குற்றம் சுமத்தப்படத்தக்க சந்தேகமிருப்பதாகக்கூட அவளுக்குத் தெரியாது: ஆகையால் திடீலென்று தன் கணவன் சிறை யாக்கப்பட்டதே அவள் பேரிடி விழுந்தவள்போல் பிர மித்துத் திகிலடைந்தாள்.

எனினும், அவளுக்குத் தன் கணவன் அத்தகைய கொலேக்குற்றத்தைச் செய்திருப்பானென்பதில் நம்பிக்கை யில்லே. அவன் நிரபராதியா யிருப்பானென்றும், அவன் மீது இக்குற்றம் அபாண்டமாகச் சுமத்தப்பட்டிருக்கிற தென்றும் அவள் நினேத்தாள். அச்சமயத்தில் தம்புசாமிப் பிள்ளே, தன்மீதேற்பட்டிருக்கும் குற்றத்தைச் சிக்கிரத்தில் விசாரித்துத் தீர்ப்புச் செய்துவிடக் கூடாதென்றும், சில தினங்கள் தள்ளிவைத்தால்தான் தக்க ருசுக்களேச் சேகரம் செய்து தன் நிரபராதத் தன்மையை ஸ்தாபித்துக்கொள்ள ஏதுவாகுமென்றும் நியாயாதிபதியிடத்தில் கேட்டுக் கொண் டான். அதனுல் அவ்விசாரணே நியாயாதிபதியால் சில மாதங்கள்வரை ஒத்திவைக்கப் பட்டுக்கொண்டுவந்தது. அதி னுலும், தம்பிசாமிப்பிள்ளேயின் மனேவி, அவன், நிரபராதியா யிருப்பதினுலேயே அதை வெளிப்படுத்தத் தக்க சாக்ஷிக ளேச் சேகரிப்பதற்கு அவ்வாறு விசாரணேக்குப் பல வாயி தாக்கள் கேட்டுவருகிறு னென்றும் கருதி யிருந்தாள்.

முன்னே தம்புசாமிப்பிள்ளேயின் கொலேக் குற்றத்தை நிச் சயமாகத் தெரிந்துகொண்டு, அதையே அவனிடம் பணம்

பறிப்பதற்கு முக்கிய கருவியாகக் கொண்டு, பயமுறுத்தி அதிகத்தொகைவாங்கிய அவனுடைய மகளாகிய நீலாட்சியென்பவளுக்கும், தம்புசாமிப் பிள்ளையைச் சிறை செய்த சமாசாரம் எட்டியது. இந்த விஷயத்தை அவள் கேட்டதும் விரைந்தோடிவந்து, தம்புசாமிப்பிள்ளையின் மனைவிக்குத் தேறுதல் கூறக்கூடியவளா யிருந்தும் வரவில்லை. தானிருக்கு மிடத்திலிருந்தபடியே, "என் பெரிய தந்தையைச் சிறை செய்ததைப்பற்றி நான் மிக்க விசனிக்கிறேன்; நான் உடனே வந்து தங்களுக்குத் தேறுதல் சொல்லக் கூடியவளாயிருந்தும், எனக்கு மிகுந்த வியாதி ஏற்பட்டிருப்பதாலும், வேறு சில அசந்தர்ப்பங்கள் நேர்ந்திருப்பதாலும் இப்போது அங்கு வரக்கூடாதவளா யிருக்கிறேன்; இதற்கு என்னை மன்னிக்கவேண்டும்" என்று தன் பெரிய தாய்க்குக் கடிதம் வரைந்தனுப்பிவிட்டு இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின் பதறாமல், 'தம்புசாமிப்பிள்ளைக்கு என்ன முடிவு கிடைக்கிறது' என்பதைப் பார்க்கலாமென்று தன் கணவனுடன் அங்கே வந்து தம்புசாமிப் பிள்ளையின் மனைவியைக் கண்டாள்.

நீலாட்சி, தம்புசாமிப்பிள்ளையிடம் அவன் செய்த கொலைக் குற்றத்தை வெளிப்படுத்தி விடுவதாகப் பயங்காட்டி முப்பதினாயிரம் பவுன் வாங்கியிருந்தும், அதைத் தம்புசாமிப்பிள்ளையின் மனைவியும் தெரிந்துகொண்டிருந்தும், அந்தப் பயமுறுத்தலுக்காகத் தம்புசாமிப்பிள்ளை நீலாட்சிக்குப் பணம் கொடுத்தானென்று அவள் நினைக்கவில்லை; அதிலுள்ள இரகசியம் அவளுக்குத் தெரியாததலால், தம்புசாமிப்பிள்ளை நீலாட்சியின்மீது மிக்க அன்புடையவனாய் அவளுடைய க்ஷேமத்தைக்கருதி அவளுக்கு அத் தொகையைக் கொடுத்தானென்றே நினைத்திருந்தாள். ஆதலின் தானும், தன் நாயகனைப்போலவே அவள் விஷயத்தில்

பக்ஷமுடையவளாயிருக்க வேண்டுமென்று கருதி அவளைக் கண்டதும் மிக்க பிரியத்தோடு உபசரித்தாள்; அன்பான வார்த்தைகளை அவளிடம் பேசினாள். எனினும் நீலாட்சி, தம்புசாமிப்பிள்ளை உண்மையாய்க் கொலைக்குற்றத்தில் சம் சந்தப்பட்டவனென்பதை அவளிடம் வெளிப்படுத்தாமல் வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டியவளா யிருந்தாள். ஏனெனில் மங்கம்மாள் என்பவள் மூலமாகவே தம்புசாமிப்பிள்ளை சிறை செய்யப்பட்டிருப்பதாலும், தம்புசாமிப்பிள்ளையின் விஷயம் தனக்குத்தெரியுமென்பதை அவள் உணர்ந்திருப்பதாலும், பின்னால் விசாரணை காலத்தில் அவள் தன்னையும் ஒரு சாக்ஷியாக விசாரிக்கும்படி செய்து விடக் கூடுமென்றும், அப்படி நேர்ந்து விடாதிருப்பதற் குத் தான் கூடியவரை உபாயந்தேடிக்கொள்ள வேண்டு மென்றும், எப்படியும் தன் பெரியதாய்க்குச் சாதகமாக நடப்பதுபோல் நடித்து வந்தால் எவ்வழியினாலேனும் தம்பு சாமிப்பிள்ளை ஒழிந்தபிறகு அவன் ஆஸ்தியைத்தானே அடைதற் கேதுவுண்டாகுமென்றும், விஷயங்கள் போகப் போக நடப்பதற்குத் தக்கபடி சந்தர்ப்பம் நோக்கி நடந்து கொள்ளலாமென்றும் கருதினாள். ஆதலின், அந்த நீலாட்சி உண்மையைத் தன் பெரிய தாயிடம் வெளிப்படுத்தாமல் ஜாக்கிரதையாகவே பேசத்தொடங்கினாள். அவள் தம்பு சாமிப்பிள்ளை நிச்சயமாகக் கொலைக்குற்றஞ் செய்தவனென் றும் சொல்லவில்லை; நிரபராதியென்றும் சொல்லவில்லை. "ஏதோ இது தெய்வச்செயலால் நடந்திருக்கிறது; எப்படி யிருந்தாலு மிருக்கட்டும்; பின்னால் என்ன முடிவாகிற தென்பதைப் பார்ப்போம்" என்று சில வார்த்தைகளைத் தந்திரமாகவும், ஜாக்கிரதையாகவுமே பேசினாள். பின்னர் தான் மேற்கூறியபடி 'எதற்கும் நாம் போய் அவரைப்

பார்த்து வருவோம்' என்று அவளை அழைத்துக்கொண்டு தம்புசாமிப்பிள்ளையிடம் போனாள்.

தம்புசாமிப்பிள்ளை அநேக தந்திரசாமார்த்திய செய்கைகளால் மிகுந்த ஐசுவரியத்தைச் சம்பாதித்துக் கௌரவமுடையவனாகவே யிருந்தான். இப்பேர்ப்பட்டவனுக்கு மாணதண்டனையடையும் விதியேற்பட் டிருந்ததால் இவ்வாறு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்க ஏதுவுண்டாயிருக்கிறது. இவனுக்கு வயது சுமார் அறுபதுக்கு மேலாகியும், ஐசுவரியமிருந்தும் நல்லபுத்தி உண்டாகவில்லை; அதனாலேயே உயர்ந்த இன்பானுவங்களை அனுபவிக்கவேண்டிய இக்காலத்தில் அவற்றை யெல்லாம் விடுத்து, இவ்வாறு சிறைக்கூடத்தில் கைதிகளோடு கைதியாய் இருந்து கஷ்டப்பட்டான். இவன் குற்றஞ் செய்திருப்பது இவன் மனதிற்கே நன்றாகத் தெரியும்; எனினும் அதை எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ளாத வஞ்ச நெஞ்சனாயிருந்தான்.

நீலாட்சியும், தம்புசாமி பிள்ளையின் மனைவியும் சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். கைதிகளைப் பார்க்க வருகிறவர்களுக்கு, சிறைச்சாலையின் கம்பிக்கதவுக்கு வெளிப்பக்கத்திலிருந்து அவர்களோடு பேசும்படிதான் அங்கே அனுமதி கொடுப்பது வழக்கம். அப்படியிருந்தும், நீலாட்சி ஒரு கௌரவம் பொருந்திய சீமாட்டியாயிருந்தபடியால் அவளுக்கும் தம்புசாமிபிள்ளையின் மனைவிக்கும் சிறைச்சாலைக்குட் சென்று தம்புசாமிப் பிள்ளையுடன் பேசுதற்குச் சிறைச்சாலை அதிகாரியால் அனுமதி யளிக்கப்பட்டது. அவர்கள் உள்ளே சென்று பார்க்கும்போது, தம்புசாமிபிள்ளை, முன்னர் நீலாட்சியால் பார்க்கப்பட்டபோது எப்படியிருந்தானோ அதே நிலையில்தானிருந்தான். அவன் தேகம் சிறிதும் வாட்டமடையவில்லை; மனம் தளர்ச்சியடையவில்லை; மிகத் தைரியமும் தெளிவுமுள்ளவனாகவே

யிருந்தான். அவன் சமீபத்தில் போனதும் நீலாட்சி மிகவும் அன்புடையவள் போல் முகத்தில் அதிக விசனக்குறியோடு அவனைத் தழுவிக்கொண்டாள். தம்புசாமிப்பிள்ளையின் மனைவி துக்கத்தால் அப்பொழுது கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றாள். அப்போது தம்புசாமிப்பிள்ளை நீலாட்சியை நோக்கி, "நாம் இருவரும் தனியே சிறிதுநேரம் பேசுதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்" என்று சொன்னான். நீலாட்சி, "அதற்கு நீர்தான் ஏற்பாடு செய்யவேண்டும்; உமக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்தற்கும் நான் தயாராக விருக்கின்றேன்" என்றாள்.

அதன்மேல் தம்புசாமிப்பிள்ளை தன் மனைவியை நோக்கி, "நான் கொலைக்குற்றம் செய்திருப்பேனென்று நீ நினைத்து என்மீது வெறுப்படையாதே; என்னுடைய பரிசுத்தமான-உயர்ந்த நடக்கைகளைப்பற்றி உன்னிடம் நான் முன்னரே கூறியிருக்கின்றேன்; என்மீது அபாண்டமாக இக்குற்றத்தைச் சுமத்தி யிருக்கிறார்கள்" என்று சொன்னான். அவள், "என் நாயகரே! உமக்கு நான் மனைவியாகி 37 வருஷங்களாகின்றன; இதுவரை உம்முடன் நான் கூடியிருந்ததில் உம்முடைய குணங்கள் எனக்கு நன்றாகத் தெரியும்; நீர் இந்தக் கொலைக் குற்றத்தைச் செய்திருப்பீரென்று நான் நிச்சயமாக நம்பவில்லை; உம்மீது அபாண்டமாக இக்குற்றம் சுமத்தப்பட்டிருக்கிற தென்பது எனக்கு நன்றாகத்தெரியும்; அநியாயமாகச் சிலர் உம்மீது இக்குற்றத்தைச் சுமத்தி என்னைவிட்டு உம்மைப்பிரித்து இச்சிறையிலடைத்திருக்கிறார்கள்; உம்மைத் தூக்கிற்போட்டுக் கொல்லவும் துணிந்திருக்கிறார்கள். அவ்வாறு அநியாயமாக உம்முடைய உயிர் போவதற்கு நான் சம்மதிக்கமாட்டேன்" என்று கைக்குட்டையால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள். பின்னர் நீலாட்சியினிடத்திலும், "இது அநியாயம்;

186504

இவர்மீது குற்றமில்லாதிருக்க இவரை இவ்வாறு குற்றவாளியாக்கி இவரைத் தூக்கிவிடத் துணிந்திருக்கிறார்கள்; இத் தீமை கடவுளுக்கு ஏற்காது" என்று கூறினாள். அத்தருணத்தில் தம்புசாமிப்பிள்ளை மெதுவாக நீலாட்சியின் செவிகளில், "என் சொத்துக்கள் முழுமையும் என் மனைவிக்கே எழுதி வைத்திருக்கிறேன்; அவற்றை அவள் உயிரோடிருக்கும் வரையில் அனுபவிக்கலாம்; பின்னர் அவை உனக்கே சேர்ந்துவிடும்; இவ்விவரம் நான் எழுதிய உயிலில் கண்டிருக்கிறது" என்று சொன்னான்.

நீலாட்சி, அவனுக்குத் தன்னாலாகவேண்டிய காரியம் ஏதேனும் இருக்குமென்று நினைத்து அவனை நோக்கி, "பெரிய தந்தையே! உமக்கு என்னாலாகவேண்டிய காரியம் யாதேனு மிருக்கின்றதா?" என்று கேட்டாள்.

தம்புசாமிப்பிள்ளை:—"உன் கணவனுடைய வழக்கு விசாரணை காலத்தில் நீ இங்கே வருவாயென்பது எனக்குத் தெரியும்; ஆதலால் உன்னுடைய வருகைக்கு நான் எதிர்பார்த்திருந்தேன்; ஏனெனில் உன்னிடம் நான் சொல்லவேண்டிய காரியம் ஒன்றுண்டு; அதைச் செய்யத் தகுதியானவள் நீயே; எனக்கது அவசியமானது; எனினும் அதைச் செய்யும்படி நான் என் மனைவியிடம் கேட்கலாகாது" என்று சொல்லி, அதுவரையிலும் கைக்குட்டையால் முகத்தை மூடிக்கொண்டு துக்கத்துடன் கண்ணீரொழுக நின்ற தன் மனைவியை நோக்கினான்.

நீலாட்சி:—பெரியப்பா! சீக்கிரம்; அதை விவரமாகச் சொல்லிவிடும்.

தம்:—நான் தூக்குமரத்தில் சாகவும் முடியாது; விசாரணை காலத்தில் அங்கு கேட்கும் கேள்விகளைக் கேட்டுச் சகித்துக்கொண்டிருக்கவும் முடியாது. என் ஆயுளுக்கு

முடிவு கட்டியாய்விட்டது; இவ்வுலகத்தில் நான் இருக்கும்படியான நம்பிக்கை எனக்குச் சிறிதும் கிடையாது; ஆதலால் நான் சீக்கிரம் ஒழிவதே நல்லது.

முன் அவனுடைய மனப்போக்கு எப்படியிருக்குமோ என்று சந்தேகங் கொண்டிருந்த நீலாட்சிக்கு இப்பொழுது அவன் எண்ணம் இன்னதென்று தெரிந்துவிட்டது. அதனால் அவள், "ஆ! அப்படியா?" என்று சப்தமிட்டாள்.

தம்:—(தாழ்ந்த குரலாய்-ஆனால் உறுதியோடு) நீலாட்சி! என் உயிரைப் போக்கிக்கொள்வதற்குத் தக்க விஷம்! விஷம்!! வேண்டும்; அது எப்படிப்பட்டதாயிருந்தாலும் சரி; என்னுடைய உயிரை நிச்சயமாகவும் சீக்கிரமாகவும் போக்கத்தக்கதா யிருக்கவேண்டும்.

நீலா:—நான் இப்பேர்ப்பட்ட காரியத்தில் பிரவேசிப்பது மிகவும் ஆபத்து.

தம்:—ஒன்றுமில்லை; நான் உனக்கு அதற்குத் தக்க வழி காட்டுகிறேன்; நீ மாறுவேட மணிந்துகொள்; பட்டணத்திற்கு வெகு தூரத்திலுள்ள விடத்திற்போய் ஒருவருமறியாமல் அவ்விடத்தைச் சம்பாதிக்க முயற்சி செய்; சிறிது சிறிதாகச் சேகரி; ஒரே கடையில் வாங்க வேண்டாம்; சில கடைகளில் கொஞ்சம் கொஞ்சம் வாங்கி ஒன்றாகச் சேர்த்துக்கொள்.

நீலா:—இதை நான் செய்து விடலாம்; ஆனால் உம்மிடம் அவ்விஷத்தை எவ்வாறு கொண்டு வந்து சேர்ப்பது?

தம்:—நீ அதற்காக மறுபடியும் இங்கே வரவேண்டியதில்லை; வேறு விதமான ஏற்பாடு செய்து விடலாம். அதை வேறொரு ஆசாமி என்னிடம் கொண்டுவந்து சேர்க்கச் செய்யலாம்; அந்த ஆளைப்பற்றி எவரும் சந்தேகங் கொள்ளமாட்டார்கள்.

அச்சமயத்தில் மிகுந்த துயரத்தால் மயங்கி நின்ற தம்புசாமி பிள்ளையின் மனைவி சற்று தெளிவடையக் கூடிய தன்மை யுடையவளா யிருந்தாள். அவள் சுய அறிவோடு இப்பக்கம் திரும்பினால் தம்பிசாமிபிள்ளை கூறும் இரகசியத்தைத் தெரிந்துகொள்ளக் கூடுமென்று நீலாட்சி அவனிடம் "பெரியப்பா! மேலே கூறவேண்டியதை கூறிவிடும்" என்று அவனைத் துரிதப்படுத்தினாள்.

தம்:—உன் மாமனார் திரவிய நாதம் பிரபுவிடம், நான் அவரைப் பார்க்க வேண்டு மென்று சொன்னதாகச் சொல்; அவர் அவசியம் வரவேண்டு மென்றும் கூறு. இதை இரகசிய மாகவே அவர் செவியில் மெதுவாகக் கூறு; பிறருக்குக்குத் தெரியும்படி செய்து விடாதே; அவர் இங்கே வருவதற்கு மறுக்கமாட்டார். நீலாட்சி! நீ மிக்க புத்திசாதுரிய முடையவளாதலின் அவரை அவ்வாறு இங்கே என்னிடம் வரும்படி செய்து விட்டு உன்னால் சேகரிக்கப்படும் விஷம் அடங்கிய பொட்டணத்தை அவர் கையிற் கொடுத்து என்னிடம் எப்படியாவது சேர்த்து விடவேண்டு மென்றுகூறு. அது சிறு பொட்டணமாயிருக்கு மாதலின் அவர் சுலபமாக இங்கே கொண்டு வந்து விடலாம்; ஆனால் அதில் பாஷாண மிருக்கிறதென்று மாத்திரம் சொல்லி விடாதே; நான் உபயோகிப்பதற்குரிய மூக்குத்தூள் (புகையிலைப் பொடி) என்று கூறு.

நீலா:—இதை நிச்சய மாகவும் சந்தேக மின்றியும் செய்து விடலாம்; ஆனால் ஒரே யொரு வார்த்தை.

தம்:—ஓ! அப்படியா! நீ சொல்ல நினைத்திருப்பதை நான் அறிந்து கொண்டேன்; என் சொத்தை நீ என் மனைவிக்குப் பிறகு அடைய வேண்டியதற்காதாரமாக நான் எழுதி வைத்திருக்கும் உயில் பத்திரத்தை நீ பார்க்க

விரும்புகிருய்; அது, என் வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலிருக்கும் லாயரிடமிருக்கிறது. ஆனுல் அதில் நான் கையெழுத்து மாத்திரம் போடவில்லை; நீ நான் சொல்வதை நிறைவேற்றித் திரவியநாதம் பிரபு மூலம் என்னிடம் பாஷாணம் வந்து சேரும்படி செய்த வுடனே—அவர் என்னிடம் வந்து சென்றவுடனே நான் அந்த லாயரை என் உயில் பத்திரத்தைக் கொண்டுவரச் செய்து அதில் கையெழுத்துப்போட்டு விடுவேன்; நீ என் கோரிக்கையை நிறைவேற்ருமல் எனக்குத் துரோகம் செய்தாயோ என் ஐசுவரியத்தில் ஒரு காசும் அடைய மாட்டாய்; யாவும் தரும வைத்திய சாலைக்குச் சேரும்படி செய்து விடுவேன்; நான் சொல்லியவற்றைத் தெரிந்து கொண்டாயல்லவா?

நீலா:—நான் தெரிந்து கொண்டேன்; பதிலுக்குப் பதில்; நான் உம்முடைய பிரியப்படி நடந்தால் நீர் எனக்கு நன்மை செய்வீர்; இல்லையேல் உபகாரஞ் செய்வதில்லை. நான் செய்ய ஒப்புக்கொண்டதை நிச்சயமாகச் செய்து முடிப்பேன்; நான் இப்போது மறுபடியும் உம்மைச் சந்திப்பேன் என்று சொல்லிச் சென்ருலும் மீண்டும் வந்து பார்க்கப் போகிறதில்லை.

தம்:—சரி போதும்; பேச்சை நிறுத்திவிடு; உன் பெரிய தாய்...

தம்புசாமிபிள்ளையின் மனைவி:—(நீலாட்சியை நோக்கி) நீ உன் பெரியப்பனுக்குத் தேறுதல் சொல்லிக் கொண்டிருக்கிருயோ?

தம்:—நீலாட்சியுடன் சம்பாஷித்ததுதான் எனக்குப் பெரிய ஆறுதலா யிருக்கிறது; இவள் மிக்க நல்லபெண்;

என்னுடைய ஆயுள் முடிவு எப்படியாயினும் சரி; என் மனைவியே! உனக்குப்பின் நம்முடைய ஆஸ்திதியை இவளே அடையவேண்டும்.

தம்-மனை:—“அதைப்பற்றி நீர் இப்பொழு தொன்றும் பேச வேண்டாம்” என்று சொல்லிக் கொண்டே மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

அச்சமயம் தம்புசாமிபிள்ளை மீண்டும் அச்சுதன் மனைவியாகிய நீலாட்சியை நோக்கி, “நீலாட்சி! நீ எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பதை மறந்து விடாதே; என்னுடைய ஆஸ்தி உன்னை அடையும் சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது” என்று சொன்னான்.

அதற்கு நீலாட்சி, “அப்படி என்றால் அக்காரியம் நிறைவேற்ற முடியாததாயிருக்கு மானால் நான் முன்னரே அதனை வெளிப்படையாகச் சொல்லி விட்டிருப்பேன்” என்றாள்.

அதன்மேல் தம்புசாமிபிள்ளை தன் மனைவியை நோக்கி, “என் அன்பே! நீ இப்பொழுது என்னை விட்டுப் பிரிந்து செல்வது நலம்; நீலாட்சியையும் உன்னுடன் அழைத்துச் செல்; அவள் மிகவும் விசனப்படுகிறாள்; நம் மூவருக்குமே இச்சமயம் துக்கம் மேலிட்டிருக்கிறது” என்றான்.

அதைக் கேட்டதும் தம்புசாமிபிள்ளையின் மனைவி, விம்மி விம்மி அழுது கொண்டு அவனை நோக்கி, “என் காதலரே! நான் இனி எப்பொழுது உம்மைக் காண்பது?” என்று வினவினாள்.

தம்:—எப்பொழுதா? ஆ! இதற்கு மூன்றுநாள் இதே வேளையில். இப்பொழுது நீ போய் வா, போய்வா.

இவ்வாறு சொன்னவுடன் தன் மனைவியும், மகளும் பிரிந்து போகப் போகிறார்கள் என்ற விசனத்தால் தன்னுடைய பேச்சை நிறுத்திக் கொண்டான். அப்போது

நீலாட்சி அவனை நோக்கி, "பெரியப்பா! இதற்கு மூன்று நாள் மாலை நாங்கள் வந்து தங்களைப் பார்க்கிறோம்" என்று சொல்லி விசன முடையவள் போல அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டாள். பின் அவளும், தம்பிசாமி பிள்ளையின் மனைவியும் சிறைச்சாலையை விட்டு வெளிப்பட்டார்கள். சிறைச் சாலைக் காவலன் அவர்களை வெளியிலனுப்பி விட்டுக் கதவை மூடிவிட்டான்.

தம்புசாமி பிள்ளையின் மனைவியும் நீலாட்சியும் தங்கள் தங்களுக்குரிய விடம் போய்ச் சேர்ந்தார்கள். அன்று மாலை நீலாட்சி, சாதாரண உடையை உடுத்திக் கொண்டும், தடிப்பான முகமூடியை அணிந்து கொண்டும், தானிருந்த மேல் மாடத்தின் அறையிலிருந்து தோட்டத்திற்குச் செல்லும் படிகளின் வழியாக இறங்கித் தனியே தோட்டத்திற்குள் சென்றாள். அத் தோட்டம் கிருஷ்ணப்பன் முன்னே கொலை யுண்டவிடம். அதைப்பற்றி முன்னே நாம் விவரித்திருக்கிறோம். அத் தோட்டத்தின் வழியாகச் சென்ற நீலாட்சி அதை விட்டு வெளியேறி நகரத்திற்குட் பிரவேசித்துப் பற்பல பாகங்களிலுள்ள சிற்சில கடைகளில் பல்வலிக்கு வேண்டு மென்று கொஞ்சம் கொஞ்சம் அபினிச் சத்து வாங்கினாள். உயிரைக் கொல்லுதற்குப் போதுமான அவ்வளவு மருந்து ஓரிடத்திலும் வாங்கவில்லை. அவள் இத்தகைய தந்திரம் செய்ததோடு தன்னுடைய அடையாளத்தை எவரும் கண்டு பிடித்துக் கொள்ளாதிருக்கும்படி ஒவ்வொரு கடைக்குச் செல்லும் போதும் உடைகளையும் வெவ்வேறு நிறமுடையனவாக மாற்றிக் கொண்டே சென்றாள். குறித்தவிடங்களில் மேற்கண்டவாறு மருந்தை வாங்கிச் சேர்த்துக் கொண்டபின், "நம்முடைய காரியம் சித்தியாயிற்று; எவரும் நம்மீது சந்தேகங் கொள்வதற்கிட

மில்லை" என்று தைரியத்துடன் தன்மாளிகை போய்ச் சேர்ந்தாள்.

தம்புசாமி பிள்ளையின் மனைவியும், அச்சுதன் மனைவியாகிய நீலாட்சியும் தம்புசாமிபிள்ளையைப் பார்க்கச்சென்ற அதேசமயத்தில் அச்சுதன் உலகையனைப்பார்க்கச் சென்றிருந்தான். இனி, நீலாட்சியின் விஷயத்தை இம்மட்டில் விட்டு அந்த அச்சுதன் விஷயத்தைக் கவனிப்போம்:

உலகையன் தான் தங்கியிருந்த ஹோட்டலில் தனக்கு விடப்பட்டிருந்த அறையில் சுருட்டுப் பிடித்தபடியே சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான். அப்போது பகல் இரண்டுமணி யிருக்கும். பின்னறையில் அவனுடைய வேலைக்காரனாகிய சீனன் சாளரக்கம்பிகளிற் சாய்ந்து தெருவைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அப்போது அவனிருந்த அறைக்குள் ஒரு மனிதன் வந்தான். அவனைச் சீனன் கவனிக்கவில்லை. வந்த மனிதன் அவனுக்குப்பின் பக்கத்திற் போய் நின்று, "உன் எஜமான் உள்ளேயிருக்கிறாரா?" என்று கேட்டான். அந்த வார்த்தைகளைக் கேட்டதும் சீனன் திடுக்கிட்டுத் திரும்பியதும் வந்த மனிதனைப்பார்த்துப் பிரமித்து நின்றான். வந்த மனிதன் அவன் திடுக்கிட்டதைப்பார்த்து "இவன் சிறு வயதுடையவனாதலினாலும், திடீரென்று நம்மைப் பாராமல் நம்முடைய வார்த்தையை மட்டும் கேட்டுப் பின்னர் நம்மைக் கண்டதாலும் இவ்வாறு திடுக்கிட்டு விட்டான்" என்று நினைத்துக் கொண்டான். அதன்மேல், முன்னுரைத்தபடி திடுக்கிட்ட வேலைக்காரன், வந்தவன் இன்னவனென்பதைத் தெரிந்து கொண்டான். அவன் யாரெனில் மேற்கூறியபடி உலகையனைப் பார்க்கச் சென்ற அச்சுதனே. அவன் அச்சுதனென்பதைத் தெரிந்து கொண்டவுடனே சீனன் உலகையன் இருக்கும் அறையின் கதவைத் திறந்து உள்ளே போய்

அவனிடத்தில் "அச்சுதன் தங்களைக் காண வந்திருக்கிறார்" என்று சொன்னான். அவனுக்குப் பின்னே அச்சுதனும் உள்ளே சென்று உலகையனைக் கண்டான். அவ்வாறு பார்த்தவுடனே, அவனை நோக்கி,

உலகையன்:—ஆ! என் பிரியமான நண்பனே! உன்னைக் கண்டு நான் மிகச் சந்தோஷமடைகிறேன்; ஆசனத்தில் அமர்வாயாக.

அச்சுதன்:—(அவன் காதைப் பற்றிக்கொண்டு) நாம் பேச வேண்டிய விஷயங்கள் அதிகமாயிருக்கின்றன—

உல:—அப்படியானால், நீ போஜன வேளை வரும்வரை இங்கே தாமதிக்கலாம்; நாம் இப்பொழுது வெளியில் உலாவச்சென்று போஜன வேளைக்குத் திரும்பிவிடலாம்; இது உனக்குச் சம்மதந்தானே.

அச்சு:—இப்போது உலவச் செல்வது தவிர மற்ற எது வானாலும் நான் சம்மதிப்பேன்; உலவுவதில் நேரம் போக்க எனக்கிஷ்டமில்லை; ஏனென்றால் நாமிருவரும் இப்பொழுது என்னுடைய லாயரிடம் செல்ல வேண்டும்.

உல:—என்னுடைய லாயர் உன்னைப்பார்க்க ஆவலாயிருக்கிறார்; அதை நான் உன்னிடம் சொல்ல மறந்து விட்டேன்.

அச்:—அப்படியானால், நாமிருவரும் இரண்டு வக்கீல்களை யும் பார்த்துவிட்டு நீ சொன்னபடி சாப்பாட்டு வேளைக்கு இங்கே திரும்பிவந்து விடுவோம்.

இவ்வாறு பேசிக்கொண்டவுடன் உலகையன், சமையல்காரனை அழைத்து அவனிடத்தில், "நாங்கள் வெளியிற் சென்று சாப்பாட்டு வேளைக்கு இங்கே வந்துவிடுவோம்; எங்களிருவருக்கும் சாப்பாடு சித்தப்படுத்திவை" என்று சொல்லிவிட்டுத் தன் வேலைக்காரனாகிய சீனனைப் பார்த்து,

"நாங்கள் ஒரு முக்கியமான காரியத்தின்பொருட்டு வெளியிற் சென்று இருவரைப் பார்த்து வரவேண்டும்; சாப்பாட்டு வேளைக்கு வந்துவிடுவோம்" என்று சொல்லிவிட்டு அச்சுதனுடன் வெளியிற் புறப்பட ஆயத்தமானுன்.

அப்போது உலகையன் சொல்லியதைக் கேட்டவுடன் அவனுடைய வேலைக்காரனுகிய சீனன், யாதொரு மறுமொழியும் சொல்லாமல், ஏதோ மனத்தில் நினைத்துத் தயங்கினவன் போல் மெதுவாக அறையைவிட்டு வெளியிற் சென்றுன். அவனுடைய நடக்கையைப் பார்த்த அச்சுதன் உலகையனை நோக்கி, "உன்னுடைய வேலைக்காரன் நடக்கை ஒரு விதமாயிருக்கிறது; உன்னிடம் ஜாஸ்தி மரியாதை யுள்ளவன்போல் காணப்படுகிருன்" என்று சொன்னுன். அதைக்கேட்டு உலகையன் சற்று முகம் வேறுபட்டு, "ஆம்; அவன் என்னிடத்தில் மரியாதையுள்ளவன் தான்; மிகவும் பற்றுடையவன்" என்றுன்.

அதன்மேல் இருவரும் வெளியில் வந்து அங்கு ஆயத்தமாக நின்ற வண்டியில் ஏறிக்கொண்டார்கள். அப்போது அச்சுதன் உலகையனை நோக்கி, "முதலில் நாம் உன்னுடைய லாயரிடமே செல்வோம்; ஏனெனில் அவர் உன்னுடைய விஷயத்தைப்பற்றி ஆராய மிகுந்த ஆவலுள்ளவராயிருப்பார்" என்று சொன்னுன். உலகையன், "அப்படித்தான் செய்யவேண்டும்" என்று சொல்லித் தன் லாயர் வீட்டிற்கு வண்டியைக் கொண்டுபோகும்படி சாரதிக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே அவனுல் வண்டி அங்குக் கொண்டுபோகப்பட்டது. இருவரும் இறங்கி லாயர் வீட்டிற்குள் நுழைந்தார்கள். லாயர் அவ்விடத்திலேயே தானிருந்தார். லாயருடைய குமாஸ்தாக்கள் அவ்விருவரையும் அவரிடம் அழைத்துக்கொண்டு போனுர்கள். அவ்விருவரையும் லாயர் கண்டவுடன் அச்சுதனை நோக்கி, "அச்

சுதா! நீ இங்கு வந்ததைப்பற்றி நான் மிகவும் சந்தோஷிக்கிறேன்; இது மிகவும் அருவருப்பான காரியம்; எல்லாவற்றிற்கும் துணிந்து வேலைசெய்ய வேண்டியதாயிருக்கிறது; என்னுடைய கக்ஷிக்காரன் உலக அனுபவமறியாத சிறு பையன்; நான் இவ்வாறு கூறியதைப்பற்றி மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்; இவனுக்கு இருபது வயது கூட ஆகவில்லை; இவன் ஒரு மைனர்; என்னுடைய ஆதாவில் இவன் இல்லாமற் போனபோதிலும் ஒருவாறு என் மேற்பார்வையிலேயே யிருக்கிறான்; ஏனென்றால் இறந்துபோன இவனுடைய மாமன் என்னுடைய ஆப்த நண்பன்" என்று சொன்னார்.

இவற்றை யெல்லாம் கேட்டதும் அச்சுதன், வக்கீல் இவ்வாறு முதலில் தாமே இவ்விஷயங்களைப் பேசியதற்கு அதிருப்தி யடைந்தான். எனினும், அதை வெளிக்குக் காட்டாமல் அடக்கிக்கொண்டு அந்த லாயரை நோக்கி, "உம்முடைய கக்ஷிக்காரன்-என் நண்பனாகிய உலகையன் இவ்வாறு ஆபத்தான விஷயத்தில் சிக்கிக்கொண்டதைப் பற்றி நான் மிக விசனிக்கிறேன்" என்றான்.

லாயர்:—இது உன்னுடைய குற்றமில்லை; இறந்துபோன கிருஷ்ணப்பனே இவனை இத்தகைய சங்கடத்தில் மாட்டி வைத்து விட்டான்; இது அவனுடைய குற்றமே. நீங்கள் இருவரும் இவ் வழக்கில் ஒரே விதமாகச் சம்பந்தப் பட்டிருக்கிறீர்கள்; நீங்கள் ஜூரர்களின்முன் நடந்தவற்றை உள்ளபடி சொல்லிவிட வேண்டியது. செய்கை நடக்கும்போது, சாக்ஷிக்காரர்களும், சர்ஜனும் கூட இருந்தார்களென்று தெரிவிக்க வேண்டியது.

அச்சுதன்:—சந்தேக மன்னியில்; இன்னும் உமக்கு நான் செய்ய வேண்டிய உதவி யிருந்தாலும் சொல்லும்.

லாயர்:—குலசேகரம் இக்காரியத்திற்கு உதவி செய்ய முன் வருவாரா?

இவ்வாறு கேட்ட சமயத்தில் உலகையன் ஒரு பக்கமாகத் திரும்பிக் கொண்டு இருமினன். அக்குறிப்பு 'குலசேகரம் வரமாட்டார்'என்பதை அச்சுதனுக்கு வெளிப்படுத்திற்று. அக்குறிப்பைத் தெரிந்து கொண்டவுடன்.

அச்சுதன்:—குலசேகரம் வருவதைப் பற்றி நான் நிச்சயமாகச் செல்லமாட்டேன்.

லாயர்:—இந்த விசாரணையில் சம்பந்தப்பட்ட எல்லோருமே அங்கு ஆஜரானல் மிகவும் கௌரவமாகவும், நலமாகவுமிருக்கும்; அச்சுதா! உனக்குத் துணையாக வந்தவர் குலசேகரம்; அவரை ஆஜராகும்படி செய்யவேண்டியது உன்னுடைய கடமை; அந்த ஆசாமியைப்பற்றி ஆச்சரியமான பிரஸ்தாபங்கள் நடந்து கொண்டிருக்கின்றன; ஏனென்ருல், கிருஷ்ணப்பனுடைய சண்டைக்குப் பிறகு அவரைப்பற்றிய சமாசார மொன்றும் தெரியவில்லை; அவர் தாமே விசாரணைக்கு வந்து ஆஜராகாதபடியால் அவரை ஆஜர்ப்படுத்துவதற்கு ஒருவாரண்டு பிறப்பிக்கப்பட்டது; போலீஸ் காரரால் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பிரபுக்கள் சஞ்சரிக்கு மிடங்களிலாவது, உல்லாசமாகப் பொழுது போக்கு மிடங்களிலாவது, ஹோட்டல்களிலாவது, அவர் காணப்படவில்லை.

அச்சு:—அவர் இப்பட்டணத்திற்குப் புதியவர்.

இது பொய்யான விஷயமாதல் இதைக் கேட்டதும் உலகையனுக்கு நகைப்புண்டாயிற்று. அதை லாயருக்குத் தெரியாமல் மறைக்கும் பொருட்டு எழுந்து உலவுகிறவன் போல் சென்று அங்கிருந்த சாளரத்தின் பக்கமாகத் திரும்பி நின்று சிரித்தான். அதன்மேல் அச்சுதனை நோக்கி,

லாயர்:—நான் உனக்கு விரோதமாகப் பேசுகிறேனென்று நீ நினைக்காதே; அப்படியானால் என்னுடைய கக்ஷிக்காரனுடைய விஷயத்திலும் பிரதி கூலமாக நடந்து கொண்டவனாவேன். எப்படி யிருந்தாலும் குலசேகரம் பிரபுவை ஆஜர்ப்படுத்தாதது ஒழுங்கின முள்ளதாகவும், ஆச்சரியமானதாகவும் புலப்படுகிறது. அவரை ஆஜர்ப் படுத்துவதால் அவருக் கொன்றும் கெடுதி நோாது; அனுகூலமே ஏற்படும். உன்னுடைய வழக்குக்குச் சாதகமாகவே யிருக்கும். என்னுடைய கக்ஷிக்காரனும், நண்பனுமான உலகையன் விடுதலை யடையும்படி செய்ய வேண்டியது என்னுடைய முக்கிய கடமை. அதற்குக் குலசேகரம் பிரபு அவசியமாகவேண்டும்; அவர் ஆஜரானால்மாத்திரம் அக்காரியம் நிறை வேறும்.

அச்சு:—குலசேகரம் ஆஜராக வேண்டிய அவசியமில்லை யென்றும், அவர் எங்கே யிருந்தாலும் இருந்து விட்டுப் போகட்டு மென்றும் என்னுடைய லாயர் சொல்லுகிறார்.

லாயர்:—(வெறுப்புற்றவர் போல்,) உன்னுடைய லாயர் இந்த வழக்கைப் பற்றி நன்றாக ஆராய்ந்து காரியம் நடத்தாதவராகவும், உன் மன நோக்கம் போல் நடப்பவராகவும் காணப்படுகிறார்; நான் முடிவாக ஒரே வார்த்தைகூறுகிறேன்; குலசேகரம் பிரபுவை ஆஜராக்க முடியுமா முடியாதா? அதை உறுதியாகக் கூறிவிடு; அதைத் தெரிந்து கொண்டபின் நான் அதற்குத் தக்கபடி காரியம் நடத்த ஆலோசிக்க வேண்டும்.

உலகையன்:—(அவ்விஷயத்தை லாயர் வளர்த்துப் பேசிக் கொண்டிருப்பதற்குச் சம்மதிப் படாதவனாய்) அச்சுதன் சொல்கிறபடியே குலசேகரத்தை நிச்சயமாக

ஆஜர்ப்படுத்த முடியாது; அவன் வெளித்தேசத்திற்குச் சென்றிருப்பதாகத் தெரிகிறது; அதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

லாயர்:—மிகவும் சரி; ஆனால் அச்சுதன் வார்த்தைகளால் எனக்குச் சந்தேகத்திற் கிடமுண்டாகிறது; இதைப் பற்றி நிச்சயமான பதிலை இவனிடம் நான் தெரிந்து கொள்ள நினைத்தேன். அது முடியவில்லை; ஆயினும் உலகையா! என்னால் கூடியவரையில் நான் உனக்கு உதவி செய்கிறேன்; நீ போய்வா.

இவ்வாறு கூறியபின் அச்சுதனை நோக்கி, "நீயும் செல்லலாம்" என்று சொன்னார். உடனே இருவரும் இலாயர் வீட்டை விட்டு வெளியேறி வண்டியிலேறிக் கொண்டார்கள். வண்டியில் ஏறியமர்ந்ததும் உலகையன் பின்னால் திரும்பிக் கலகலவென்று சிரித்தான். அதைப் பற்றி, அவன் தன்னைப் பரிகசிக்கிறானென்ற நினைப்பால் அச்சுதனுக்குக் கோபமுண்டாயிற்று. எனினும் உடனே அதைவிட்டுத் தான் உலகையனுடைய வக்கீலிடம் நினைத்ததைச் சாதித்து விட்டதைப் பற்றிச் சந்தோஷமடைந்தான். ஆனால், இவன் இவ்வாறு முதலில் வெறுப்பையும் பின்னால் களிப்பையும் அடைந்ததை உலகையன் கவனிக்கவில்லை.

அப்போது அச்சுதன் உலகையனை நோக்கி, "நான் என்னுடைய லாயரிடம் சென்றதும் அவர், குலசேகரம் ஆஜராக வேண்டியது அவசியமில்லையென்று சொல்லப் போகிறார்; அதை நீ காதாற் கேட்கப் போகின்றாய்" என்றான். அதைக் கேட்டதும் உலகையன் மீண்டும் கலகலவென்று நகைத்தான். அச்சுதனுக்கு மறுபடியும் கோபமுண்டாயிற்று. பின் இருவரும் அச்சுதனுடைய லாயர் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அந்த லாயரும்

இவர்களைக் கண்டவுடன் பேசத் தொடங்கி, அச்சுதன் முன்னே கூறியபடியே குலசேகரம் பிரபு ஆஜராகவேண்டிய அவசியமில்லை யென்று உலகையன் மனதிற் பதியும்படி அழுத்தமாகச் சொல்லிவிட்டார். பிறகு மாலை ஆறு மணிக்கு இருவரும் ஹோட்டலுக்குத் திரும்பி வந்தார்கள்.

இவர்கள் லாயரிடம் சென்றது, கிருஷ்ணப்பன் சண்டையில் இறந்த விஷயத்தில் தாங்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக நடந்த கொலைக் கேஸின் காரியமாகவே.

இவர்கள் போனபோது சீனன், உலகையனிருந்த அறைக்குப் பின் பக்கத்தறையில் இருந்தான். அச்சுதனுக்கும் உலகையனுக்கும் சமையல் காரனால் போஜனம் பரிமாறப்பட்டது. அவ்விருவரும் ஆகார முண்டு கொண்டிருந்தார்கள். சீனன் அவர்களுக்கு ஏதாவது வேண்டியிருக்குமென்று அடிக்கடி வந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர்களின் ஆகாரங்களுடன் சாராய வகைகளும் வைக்கப் பட்டிருந்தன. அவற்றைப்பார்த்து அச்சுதன், "உலகையன் சாராயத்தைக் குடித்து விட்டு அந்த வெறியால் நாம் இழுக்கும் வழிக்கெல்லாம் வந்து விடுவான்; அதற்கிதுதான் நல்ல சமயம்" என்று நினைத்துக் கொண்டே ஆகார மருந்தினான். அச்சமயம் சீனன் முன்கூறியபடியே மேலும் அடிக்கடி அங்கே வந்து வந்து எட்டிப் பார்த்தபடியே யிருந்தான்.

அவனுடைய செய்கையைப் பார்த்ததும் அச்சுதன் உலகையனை நோக்கி, "ஏது! உன் வேலைக்காரன் உன்மீது அளவுக்கு மிஞ்சிய அக்கரை யுடையவனாகக் காணப்படுகிறான். அவன் நடக்கையைப்பற்றி எனக்கு அதிருப்தி யுண்டாகிறதே. உன்னிடம் அவன் விஷயங்களைக் கண்டித்துப் பேசக் கருதி யிருந்தேன். அதற்குத் தக்கபடியே அவனுடைய செய்கை இப்பொழுது மிருக்கிறது; அவன் எதற்

காக இங்கே அடிக்கடி வருகிறான்? அவனுக்கிப்போது இங்கே யாதொரு வேலையுமில்லை. ஆதலால் அவனை வெளியிற் சென்று எங்கேனுமிருந்து பொழுது போக்கிவிட்டு வரச் சொல்'' என்று சொன்னான்.

உலகையன் புன் சிரிப்போடு ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருந்த வேலைக்காரனை நோக்கி, அவனுடைய தேச பாஷையில், "சினு! நீ எனக்குச் செய்ய வேண்டிய காரியம் இப்போதொன்று மில்லை'' என்று சொன்னான்.

அவன் பதிலொன்றும் சொல்லாமல் அறையை விட்டு வெளியிற் சென்றான். அவ்வாறு சென்றவுடன் உலகையனை நோக்கி,

அச்சுதன்:—நீ உன்னுடைய வேலைக்காரனை வெளியே போகச் சொல்வதற்கு முன் என் சிரித்தாய்? நான் சொன்னதை அவன் தெரிந்து கொண்டானோ? அவனுக்கு இந் நாட்டுப்பாஷை தெரியுமோ?

உலகையன்:—அது எனக்குத் தெரியாது; அவனுக்கு இந் நாட்டுப்பாஷை தெரியுமோ தெரியாதோ வென்பதைப்பற்றி நான் நினைக்கவுமில்லை; அது தெரியுமா வென்று நான் எப்பொழுதும் அவனிடம் கேட்டதுமில்லை; அதைப்பற்றி அவனைப் பரீக்ஷித்ததுமில்லை; எனக்கு அவனுடைய நாட்டுப் பாஷை தெரியுமாதலால் அதனாலேயே அவனுடன் நான் எப்பொழுதும் பேசுவது வழக்கம்.

அச்:—அப்படியா! நீ எப்பொழுதும் உன் வேலைக்காரனிடம் அவனுடைய பாஷையிலேயே பேசுகிறாய்? இருக்கட்டும்; அதைப்பற்றி அவசியமில்லை. நாம் கொஞ்சம் பானவகைகளைப் பருகலாம்.

இவ்வாறு கூறியபின், இருவரும் விரும்பியவரையில்

சாராயத்தைக் கிண்ணங் கிண்ணமாகப் பருகினார்கள். சிறிது நேரம் சென்றபின் அச்சுதனை நோக்கி,

உலகையன்:—என்னுடைய லாயர், ஆ! என்ன பிடிவாதக் காரன்! குலசேகரம் பிரபுவை ஆஜர்ப்படுத்தும் விஷயத்தில் உன்னை அவ்வளவு தூரம் வற்புறுத்தினானே!

அச்:—அவனுக்குச் சரியான புத்தியில்லை; குலசேகரம் ஆஜரானால் தான் என் வழக்காவது, உன் வழக்காவது ஜெயமடையுமென்று அவன் சொல்வது மிகவும் பரிகாசத்திற் கிடமாயிருக்கிறது. உன் பண லேவாதேவி அந்த லாயரிடமிருக்கிறதோ?

உல:—ஆம்; கொஞ்சமிருக்கிறது. ஆனால், முழுதும் அவனுடைய பொறுப்பல்ல; என் குடும்பத்திற்கு அவன் பழய சிநேகிதன், மிகவும் மரியாதை யுள்ளவன்; ஆதலால் என்னுடைய காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பு சிறிது அவனுக் கேற்பட்டிருக்கிறது. குலசேகரனைக் கண்டு பிடித்துவிட்டால் அவன் மிகச் சந்தோஷத்தை அடைவான்.

அச்:—(திடுக்கிட்டு) குலசேகரனைக் கண்டு பிடித்துவிட்டால் என்பாடு அதோகதிதான்.

உல:—எனக்கு அனுகூலமுண்டாக வேண்டுமென்பதே அவனுடைய நோக்கம்; உன்னுடைய சாதக பாதகத்தைப்பற்றி அவனுக்கு அக்கரையில்லை. அவனுடைய எண்ணம் எனக்கு நன்றாகத் தெரியும்; இந்தக்காரியத்தில் நான் ஏமாற்றப்பட்டிருக்கிறேன் என்பது அவனுடைய தீர்மானம்.

அச்:—சரி! சரி!! அதைப்பற்றிப் பேசி என்ன பயன்?

உல:—(சாராயத்தைப் பருகியபடியே) ஆம்; ஒன்றுமில்லை; நீ வேறு எதைப்பற்றியேனும் பேசினால் நான் அதைப் பற்றிக் கேட்க ஆயத்தமாயிருக்கிறேன்.

இவ்வாறு சொன்னபின் இருவரும் சிறிதுநேரம் வரை பேசாமலிருந்தார்கள். பின் சார்யத்தைப் பருகினர்கள். பிறகு பேச ஆரம்பித்து,

அச்:—உலகையா! நீ மிகவும் அதிர்ஷடசாலி; உனக்கு வருடத்திற்கு எண்ணுயிரம் பவுன் கிடைக்கத்தக்க ஏதுவுண்டாயிருப்பது சந்தோஷிக்கத்தக்கதே. இவ்வளவு ஐசுவரியமும் கௌரவமும் பொருந்திய நீ உன்னுடைய அந்தஸ்திற்குத் தக்கபடி சரியான இடத்தில் மணஞ்செய்து கொள்ளவேண்டும்.

உல:—அதைப்பற்றி இப்பொழுதென்ன அவசரம்? எப்படியாவது சரியான இடம் கிடைத்தால்—சந்தர்ப்பம் வாய்த்தால்......

அச்:—உன் எண்ணம் எனக்கு நன்ருகத் தெரியும் ; பிரபு வமிசத்தில் சம்பந்தம் செய்துகொள்ள உனக்கு விருப்பமிருக்கிறது.

உல:—இறந்துபோன கிருஷ்ணப்பனும் என் விஷயத்தில் இதேமாதிரி தான் பேசிக்கொண்டு வந்தான்; உயர்ந்த குடும்பங்களிலேயே மணஞ்செய்து கொள்ளவேண்டுமென்று என்னை வற்புறுத்தி வந்தான்; மேலான குடும்பத்தார்களிடத்தில் நான் பழகி வரும்படியும் செய்தான் ; அத்தகைய சம்பந்தம் நேரவேண்டிய காலம் எனக்கேற்பட்டிருக்கும் பக்ஷத்தில் அப்பொழுதே முடிந்திருக்கலாம்.

அச்:—அப்பொழுது நடக்காவிட்டாலும் இப்போது நடக்க நான் ஏற்பாடு செய்கிறேன்; முந்தியே உனக்குத் தகுந்த இடத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறேன்; நீ உன் சம்மதத்தைத் தெரிவித்தால் அதே இடத்திலுள்ள பெண்ணை முடித்துவிடலாம்.

உல:—அச்சுதா! நீ பரிகாசம் செய்கிருயோ ?

அச்:—பரிகாசமில்லை.

உல:—அப்படியானல் நீ தெரிவித்த அந்தப்பெண் யார்?

அச்:—அவள் ஒரு பிரபுவின் புதல்வி; உயர்தரப் பட்டமுடையவள்; மிக்க அழகுடையவள்; உன்மீது அதிகரித்த அன்புமுடையவள்.

உல:—(சற்று வெறுப்படைந்து) ஓ! இப்பொழுது நான் தெரிந்துகொண்டேன்; நீ என்னைப் பரிகாசமே செய்கிறாய்.

அச்:—நான் உண்மையில் பரிகாசம் செய்யவில்லை; உண்மையே கூறினேன். சத்தியமாகச் சொல்லுகிறேன்; நான் இதுவரை கூறியது என் தங்கை ஜீவாம்பாளைப் பற்றியே.

இதைக் கேட்டவுடன் உலகையன் மனத்தில் சந்தோஷம் பொங்கிற்று. எனினும் உடனே அது ஒரு காரணத்தால் மாறிவிட்டது. அதனால் அவன் அச்சுதனை நோக்கி, "அச்சுதா! நீ சொல்வது சிறிதும் தகுதியற்ற வார்த்தை; நான் அந்தப் பெண்ணைப் பார்த்ததேயில்லை; அவளும் என்னை எப்பொழுதுமே பார்த்திருக்கமாட்டாள். அவள் மிகவும் அழகுள்ளவள் என்று நான் கேள்விப்பட்டிருந்தபோதிலும்......" என்று மேலே ஏதோ சொல்லப் போனான். அதற்குள்,

அச்:—இப்பேர்ப்பட்ட முக்கியமான விஷயங்களில் நான் பரிகாசம் செய்யவேண்டிய அவசியமென்ன? நீ யேன் அவ்வாறு நினைக்கிறாய்? நீ சொல்வது பிசகு; என் தங்கை உன்னைப் பார்த்திருக்கிறாள்; நீயும் அவளைப் பார்த்தே யிருக்கிறாய்; அவள் அழகுள்ளவள் என்பதிலும் சந்தேகமில்லை; நீயே அதைப்பற்றிக் கேள்விப் பட்டிருப்பதாகச் சொல்கிறாய்; உலகத்தார், அவள் அழகில்லாதவளா யிருக்கும்பக்ஷத்தில் அவ்வாறு

பொய் கூறமாட்டார்கள்; உண்மையில் அவள் அழகுள்ளவளா யிருந்தால் மாத்திரமே அவ்விஷயம் எங்கும் பரவும். அவளுடைய சகோதரனுன நானே, அவள் எல்லா நற்குணங்களும் அமையப்பெற்றவளென்று சொல்லுகிறேன்; இதில் நீ எள்ளளவும் ஐயங்கொள்ள வேண்டியதில்லை. சீக்கிரம் அவள் உனக்கு மனைவியாகவேண்டும்.

உல:—(அச்சுதன் கரத்தை அன்புடன் பற்றிக்கொண்டு) உனக்கு மிக்க வந்தனம். ஜீவாம்பாளின் நாட்டம் என் மேல் பதிந்திருக்கிறதென்று சொல்கிறுய்?

அச்:—அது மெய்; உள்ளதை நான் உன்னிடம் சொல்லிவிடுகிறேன்; நீ மிகவும் யோக்கியன்; உன்னை நான் மைத்துனனுக அடைவது எனக்கு மிகவும் சந்தோஷம்; ஜீவாம்பாளும் உன்னை மணந்துகொள்ள ஆயத்தமாயிருக்கிறுள்; இக்கூட்டுறவால் நீ கூடிய சீக்கிரம் மரியாதையான இடங்களில் பழகிவரலாம்; இன்னுமொரு இரகசியம்—

உல:—இரகசியமா? என்ன இரகசியம்? அதை மறைக்காமற் கூறிவிடு.

அச்:—அது உனக்குத் தெரியவில்லையா? யோசித்துப்பார்.

உல:—எனக்கொன்றும் தெரியவில்லை; நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லை.

அச்:—(சற்று யோசித்து) ஆ! என் தங்கையின் உருவப் படமிருந்தால் இப்போது உனக்குக் காட்டிவிடுவேன்; நான் சொல்வதை நன்றாகக் கவனித்துக்கொள்; ஒரு பெண்; வயது இருபத்திரண்டு; உயரமும் தேகபுஷ்டியுமுடையவள்; நீல நிறமாகிய விசாலமுள்ள கண்களையுடையவள்; எவர்க்கும் விருப்பத்தை விளைவிக்கக் கூடிய பார்வையுடையவள்; இதழ்சிவப்பு; முத்துப்

186509

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

# கனகபூஷணம்

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் எவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர், பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக் கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக் கூடியவையுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கைகளுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும் ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்

# "ஆனந்தபோதினி"

**ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.**

இச்சஞ்சிகை 1915௵ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமிமுதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும்விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரிக்காப்பி இனாம்.

**ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.**

| | ரூ. | அ. | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தவிகட .. | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் 4 பாகமும் ... | 8 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| | | | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press Madras.